பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 32 சனிக்கிழமை (16.07.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :232

## பயணப் பாதுகாப்பை உறுதிப்படுத்த மேலும் தாமதம் அரசு காட்டுமானால் நமது பாதையில் செல்வோம்!



### கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் அரசுக்கு தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை

கிளிநொச்சி,ஜூலை16

போராளிகளின் பாதுகாப்பான பயணத்தை உறுதிப்படுத்தும் விடயத்தில் அரசு மேலும் காலதாமதத்தை ஏற்படுத்தினால் புலிகள் தமக்கே உரிய பாணியில் பயண வழிமுறை களைக் கைக்கொள்வார்கள் என்ற சாரப்பட புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் தலைவருக்குத் தெரி வித்துள்ளார்.

அவ்வாறான ஒரு நிலைமை ஏற்பட்டால் போராளிகளின் பயணத்தில் பாதுகாப்புப் படையினர் தலையிடாது இருக்கவேண்டும் என்றும் -

அவ்வாறு தடுத்தால் அதற்கான மாற்று நடவடிக்கைகளைத் தாம் எடுக்கவேண்டி வரும் என்றும் -

கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்டுக்கு எழுதிய கடிதத்தில் தமிழ்ச் செல்வன் மேலும் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தின் முழுவிவரம் வருமாறு:-

"மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசு என்ற வகையில் நாங்கள் காலவரையறை களை ஏற்றுச் செயற்படுவதில்லை", - என சமாதானச் செயலகப் பணிப்பாளர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். உண்மை யாதெனில் காலவரையறைகளின் அடிப்படையில்

(02ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பின் பிரிவுகளுக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை!

## அரசு - புலிகள் உடன்பாடு அதனால் தவிடுபொடியானது

கொழும்பு,ஜூலை16

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டு மானப்பணிகளை முன்னெடுப்பதற்காக அரசும் விடுதலைப் புலிகளும் உடன்பாடு கண்ட பொதுக்கட்டமைப்பு ஏற்பாட் டின் பல முக்கிய பிரிவுகளுக்கு இடைக்காலத் தடை உத்தரவு விதித்திருக்கின்றது இலங்கை உயர் நீதிமன்றம்.

இதனால் அந்த உடன்பாடு செயற்படுத்தப்படுவது பெரும் பாலும் தவிடுபொடியாகிவிட்டது.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் கள் 39 பேரும் மூன்று அணிகளாகப் பிரிந்து தாக்கல் செய்திருந்த மூன்று அடிப்படை உரிமைமீறல் மனுக்களின்மீதே உயர் நீதி மன்றம் இந்த இடைக்காலத்தடை உத்தரவை நேற்று வழங்கியது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா வழங் கிய இத்தீர்ப்பைத் தாங்களும் ஏற்றுக்கொள்கி றார்கள் என இந்த மனுக்களை விசாரணை செய்த மற்றைய இரு நீதியரசர்களான ராஜா பெர்னாண்டோ மற்றும் ஆர்.ஏ.என்.ஜி.அமர துங்க ஆகியோர் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த இடைக்கால உத்தரவின் பிரகாரம்-

(02ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் அரசியல் முறைமையில் அமைதித் தீர்வுக்கு வாய்ப்பு உண்டா?

### உயர்நீதிமன்றத் தீர்ப்பு நல்ல படிப்பினை என்கிறார் ஜோசப் எம்.பி.

கொழும்பு,ஜூலை16

இலங்கையின் அரசியல் முறைமை அமைதி வழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வாய்ப்பைத் தரவே மாட்டாது. அதைத்தான் இந்த உயர்நீதிமன்றத் தீர்ப்பு எமக்கு மீண்டும் உணர்த்தியிருக்கின்றது.

- இவ்வாறு கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பி யான ஜோசப் பரராஜசிங்கம்.

பொதுக்கட்டமைப்பு ஏற்பாடுகளின் பல் வேறு சரத்துகளுக்கு இடைக்காலத் தடை விதித்து உயர்நீதிமன்றம் நேற்று வழங்கிய உத்தரவு குறித்து கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை முன் னெடுப்பதற்காக ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்குக் கூட இலங்கை அரசியல் முறைமையில் ஓர் இடம் இல்லை என்பது தெளிவாகியுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பின் முக்கிய பல்லை கழற்றியதாக வீரவன்ஸ புளகாங்கிதம்

### ஜே.வி.பிக்கு கிடைத்த முதல் வெற்றி என மார்தட்டுகிறார்

கொழும்பு,ஜூலை16

பொதுக்கட்டமைப்பின் சில விடயங் களுக்கு உயர்நீதிமன்றம் விடுத்திருக்கும் இடைக்காலத் தடை உத்தரவு பொதுக்கட் டமைப்பிற்கெதிராக ஜே.வி.பி. முன்னெடுத் திருக்கும் போராட்டத்திற்குக் கிடைத்த முத லாவது வெற்றியென்று அக்கட்சியின் பிரசா ரச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பின ருமான விமல் வீரவன்ஸ நேற்றுத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக ஜே. வி.பி. தாக்கல் செய்திருந்த அடிப்படை

(16ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்றில் மூன்று இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக்கொலை!

### அவர்கள் பயணித்த ஓட்டோ தீக்கிரை

அக்கரைப்பற்று,ஜூலை16

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்றில் ஓட்டோ சாரதி உட்பட மூவர் கடத்திச்செல் லப்பட்டு சுட்டுக்கொலை செய்யப்பட்டுள் ளனர். அவர்கள் பயணித்த ஓட்டோவும் தீக் கிரையாக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை மூன்று மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர்களான நான்கு பிள்ளைகளின் தந்தையான அப்துல் ரிபாஸ் (வயது 26), ஒரு பிள்ளையின் தந்தை யும் ஓட்டோ சாரதியுமான ஹபீபுல்லா மொக மட் நாஸர் (வயது 23), மட்டக்களப்பு பளு காமத்தைச் சேர்ந்த ஓட்டோ சாரதியான ஜய சேகரபண்டா குஜேந்திரன்(வயது26) ஆகி யோரே இச்சம்பவத்தில் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று - அம்பாறை பிரதான வீதியில் 6ஆம் கட்டை என்னும் இடத்தில் வீதியோரம் அவர்களின் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.கைகள் கயிற்றினால் பின்பு றமாகக் கட்டப்பட்ட நிலையில் அவர்கள் சுடப்பட்டிருந்தனர். அவர்கள் மீது சரமாரி யான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள் ளப்பட்டதற்கான காயங்கள் காணப்படுகின்றன

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் கண்காணிப்புக் குழு நேற்று சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ்.மாவட்ட அரசியல்துறையினருக் கும் - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வின் யாழ். அலுவலகப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று நடை பெற்றது. இந்தச் சந்திப்பில் அரசியல்துறை சார்பில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, துணை அரசி யல்துறைப் பொறுப்பாளர் கண்ணன், ஊடக இணைப்பாளர் க.இமையவன் ஆகியோர் கலந்துகொண்டனர் என்றும் -

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய நிலை வரம் குறித்து இதில் விரிவாக ஆராயப்பட் டது என்றும் கூறப்பட்டது. (ஏ)

## நேற்றும் ஒரு மனு தாக்கல்

பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக நேற்றைய தினமும் அடிப்படை உரிமை மீறல் மனு வொன்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுப்பட்டிருக்கிறது. காத்தான்குடியைச் சேர்ந்த மஹ்மூத் லெப்பை அலீம் அஹ்மட் என்ற முஸ்லிம் ஒருவர் சார்பில் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் கிழக்கு மாகாணத்தில் பெருமளவிலான முஸ்லிம்கள் உயிரிழந்தும் பாதிக்கப்பட்டும் இருக்கின்றனர் எனவும், ஆனால் பொதுக்கட்டமைப்பில் முஸ் லிம் களுக்கான பங்களிப்பு உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் உயர் நீதிமன்றத்திடம் சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர் இதன் காரணமாகத் தனது அடிப்படை உரிமை மீறல் மீறப்பட்டிருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார். (இ-க)

## அமைதி முயற்சிக்கும், நிவாரணப் பணிகளுக்கும் ஐரோப்பிய ஒன்றியம் முழு ஆதரவு வழங்கும்

கொழும்பு,ஜூலை16

இலங்கையின் அமைதி முயற்சிகளுக் கும் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற் றும் மீள்கட்டுமானப் பணிகளுக்கும் ஐரோப் பிய ஒன்றியம் தனது முழுமையான ஆத ரவை வழங்குமென்று ஒன்றியத்தின் உப தலைவர் திருமதி மார்கிரட் வோல்ஸ்ட்ரம் ஜனாதிபதி குமாரதுங்கவிடம் உறுதியளித் துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகை யில் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தியபோதே ஐரோப்பிய ஒன்றியத்தின் உப தலைவர் மேற்படி உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கும் உதவிகள் மற்றும் இரு தரப்பு களுக்கிடையிலான பரஸ்பர தொடர்பாடல் கள் குறித்து இங்கு பேச்சு நடத்தப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பின் பிரிவுகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள-

* பிராந்தியசபை கிளிநொச்சியில் இயங்க முடியாது.
* பிராந்தியசபைத் திட்டங்களை அங்கீகரிக்கவும், நிர்வகிக்கவும் இடைக்காலத் தடை விதிக்கப்படுகிறது.
* பிராந்திய நிதியம் உருவாக்குவது முதல் அதன் செயற்பாடுகள் வரையான பொதுக்கட்டமைப்பின் ஏழாவது பிரிவு முழுவதற்கும் தடை வழங்கப்படுகிறது.
* பொதுக்கட்டமைப்பின் முக்கிய செயற்பாட்டு அங்கமான திட்ட முகாமைத்துவக் குழுவும் செயற்படமுடியாது. அந்தப் பொறுப்பு அரசின கீழ் கொண்டுவரப் படுகிறது.

- இவையே நேற்றைய இடைக்காலத் தீர்ப்பின் முக்கிய அம்சங்களாகும்.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களில் சட்டமா அதிபர், நிவாரணம், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர், மேற்படி பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் அரசுத் தரப்பில் ஒப்பமிட்ட மேற்படி அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜெயசிங்க, புலிகள் சார்பில் இந்த உடன்பாட்டில் ஒப்பமிட்ட சண்முகலிங்கம் ரஞ்சன் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

நேற்றைய இடைக்கால உத்தரவில் நீதியரசர்கள் தெரிவித்திருக்கும் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

அரசின் அதிகாரத்தை ஜனாதிபதி பிரயோகிக்கும்போது அவர் நாடாளுமன்றத்தின் அல்லது அமைச்சரவையின் இணக்கத்தோடு அதை மேற்கொள்ள வேண்டும் என்று இங்கு வாதிடப்பட்டது.

பொறுப்பும், பதிலும் கூறும் விடயங்களில் ஜனாதிபதி தேவைப்படும் சமயங்களில் அமைச்சரவையினதும், நாடாளுமன்றத்தினதும் இணக்கத்தைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

இந்த உடன்பாடு கைச்சாத்தாகும் சமயத்தில் அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், அமைச்சரவையால் அது விதந்துரைக்கப்படவில்லை என்பதைக் காட்டும் சாட்சியங்கள் ஏதும் நீதிமன்றின் முன் சமர்ப்பிக்கப்படவில்லை.

எப்படியென்றாலும் நாடாளுமன்றத்தின் அல்லது அமைச்சரவையின் இணக்கத்தோடு இந்த விடயத்தை முன்னெடுப்பதில் ஜனாதிபதி ஏதேனும் தவறிழைத்திருப்பாரேயானால் அது அமைச்சரவையினதும், நாடாளுமன்றத்தினதும் உடனடி சிரத்தைக்குரிய விவகாரமே தவிர நீதிமன்றத்துக்குரியதல்ல.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் அத்தியாவசிய, நிவாரண மற்றும் உதவிகள், புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்திப் பணிகளை ஏற்படுத்திக் கொடுப்பது அரசினதும் நிறைவேற்று அதிகாரத்தினதும் தலைவர் என்ற முறையில் ஜனாதிபதியின் கடமையாகும். இந்த வகையில் ஜனாதிபதி ஓர் உடன்பாட்டை செய்து கொண்டமையை நாம் சட்டவிரோதமானது என்று கருதவில்லை.

மூன்றாவது எதிர்மனுதாரரான அமைச்சின் செயலாளர் இலங்கை அரசின் சார்பில் ஓர் உடன்பாட்டைச்செய்ய கூடாதென்றோ, அத்தகைய உடன்பாட்டைச் செய்வதற்கான அதிகாரத்தை ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளருக்கு வழங்க முடியாதென்றோ தாங்கள் தெரிவித்த கருத்துகளுக்கு மனுதாரர்கள் நியாயமான வாதங்களை இங்கு சமர்ப்பிக்கவில்லை என நாம் கருதுகின்றோம்.

புலிகள் அமைப்பு நாட்டில் உயிர் மற்றும் உடைமைகள் தொடர்பாக பேரழிவுகளை ஏற்படுத்திய ஓர் பயங்கரவாத இயக்கம் என்பதால் அதனோடு ஜனாதிபதி கூட உடன்பாட்டைச் செய்யமுடியாதென மனுதாரர்கள் இங்கு தெரிவித்திருந்தனர். அந்த அமைப்பை சட்டரீதியான ஓர் அமைப்பாக ஏற்றுக்கொள்ளவும் முடியாதென்றும் மனுதாரர்களின் சட்டத்தரணி வாதிட்டிருந்தார்.

சட்டத்தின் மூலம், பிரதிநிதித்துவப்படுத்த முடியாத ஓர் அமைப்பாக புலிகள் இயக்கம் இருக்குமானால், அதன் பிரதிநிதி ஒருவரை இந்த வழக்கின் நான்காவது எதிர்மனுதாரராக, மனுதாரர்களே எப்படிக் குறிப்பிட முடியும்? எனவே மனுதாரரின் இந்த வாதம் அவர்களின் இந்த நடவடிக்கையால் அடிபட்டுப் போகின்றது.

அத்தோடு, ஏற்கனவே இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஓர் யுத்தநிறுத்த உடன்பாடு நடைமுறையில் இருப்பதையும் அந்த உடன்பாடு முழுஅளவில் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என இந்த உடன்பாட்டில் குறிப்பிடப்பட்டிருப்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

எனவே, இந்த உடன்பாட்டின் முகவுரையில் குறிப்பிட்டபடி மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக நான்காவது எதிர்மனுதாரரான புலிகளின் பிரதிநிதியோடு ஒப்பந்தம் ஒன்று செய்வது சட்டவிரோதமானதல்ல. இந்த விடயத்தில் தமது பக்கத்தில் நியாயமான வாதங்கள் எவற்றையும் சமர்ப்பிக்க மனுதாரர்கள் தவறிவிட்டதால் முழு உடன்பாட்டுக்கு எதிராகவும் தடையுத்தரவு பிறப்பிக்க மறுக்கிறோம்.

பாதிக்கப்பட்ட ஆறு மாவட்டங்களையும் சேர்ந்தவர்களுக்கு கிளிநொச்சிக்கான பாதை இலகுவானதல்ல. மனுதாரர்களின் இந்த வாதத்தை எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் எதிர்க்கவில்லை. அத்தோடு இந்த உடன்பாட்டில் 6(இ) பிரிவின் படி பிராந்திய சபைகளின் சிறுபான்மைக்குழுக்களின் பிரதிநிதிகள் தங்களுடைய கடமைகளை பயமின்றி நிறைவேற்ற வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்று மனுதாரர்கள் சமர்ப்பித்துள்ள வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கது. குறிப்பிடப்பட்ட இடத்தில் அத்தகைய சுயாதீனமான சூழ்நிலை இருக்காது என்ற மனுதாரரின் வாதம் நிராகரிக்கத்தக்கதல்ல. அதனால் இவ்விடயத்தில் இடைக்கால நிவாரணம் நீதிமன்றினால் வழங்கப்படுகிறது. இதன்படி பிராந்தியசபை கிளிநொச்சியில் நிலைகொண்டிருக்கவேண்டுமென்ற உடன்பாட்டில் 6(ஊ) பிரிவை செயற்படுத்துவதற்கெதிராக இடைக்காலத் தடை விதிக்கப்படுகிறது.

எனினும், இருதரப்புகளும் (அரசும் - புலிகளும்) பின்வரும் இரண்டினதும் அடிப்படையில் பொருத்தமானதொரு இடத்தைத் இதற்காகத் தெரிவுசெய்யும் சுதந்திரம் உடையனவாகும்:-

* பாதிக்கப்பட்ட 6 மாவட்டங்களுக்குள் அவற்றின் மையமான ஓர் இடத்தில்.
* பாதிக்கப்பட்ட 6 மாவட்டங்களைச் சேர்ந்த எல்லோரும் சுயாதீனமாகத் தடையேதுமின்றி சென்றுவரக்கூடிய ஓர் இடத்தில்.

இவற்றின் அடிப்படையில் முழுத் தீர்ப்பின் சுருக்கம் வருமாறு:-

(அ) முழு உடன்பாட்டுக்கும் எதிராக இடைக்காலத் தடையுத்தரவு வழங்கப்படவில்லை. கீழே தீர்ப்பில் குறிப்பிடப்படும் கட்டுப்பாடுகளுக்கமைய உடன்பாட்டில் குழுக்கள் அமைக்கப்பட்டு இயங்கமுடியும்.

(ஆ) பிராந்திய சபைகளின் ஆழிப்பேரலைக்குப் பின்னரான நிவாரணம், புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான

(16ஆம் பக்கம் பார்க்க)

# பயணப் பாதுகாப்பை உறுதிப்படுத்த மேலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தான் போர்நிறுத்த ஒப்பந்தமே வரையப்பட்டுள்ளது. இதனை நாம் நினைவுபடுத்த விரும்புகிறோம். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நாளிலிருந்து குறிப்பிட்ட நாள்களுக்குள் வணக்கத்தலங்கள், பாடசாலைகள், மக்கள் வாழும் இடங்கள் மற்றும் பொது இடங்களை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவம் விலகி, மக்களின் இயல்பு வாழ்வுக்கு வழிகோலவேண்டும் எனக் கூறும் போர்நிறுத்த ஒப்பந்தம் காலவரையறைகளின் அடிப்படையில்தான் அமைந்துள்ளது.

### இரு அதிகார மையங்கள் அதுவே யதார்த்தம்

இத்தீவில் இரண்டு அதிகார மையங்கள் இருக்கின்றன என்பதை ஏற்றுக்கொண்டு இரு அதிகார மையங்களும் தத்தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை வைத்துள்ளன என்ற உண்மையின் அடிப்படையிலேயே போர்நிறுத்த ஒப்பந்தம் வரையப்பட்டது என்பதை ஸ்ரீலங்கா சமாதானச் செயலகப் பணிப்பாளருக்கு இவ்விடயத்தில் நாம் நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

போர்நிறுத்த ஒப்பந்த விதிமுறைப்படி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணிகளில் ஈடுபடும் - ஆயுதம் தரிக்காத போராளிகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கே உண்டு. இந்த யதார்த்த நிலையை நிராகரித்துச் செயற்படுவதானது போர்நிறுத்த சூழல் குழம்பிப் போவதற்கே வழிவகுக்கும். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு மற்றும் நோர்வேத் தூதரகம் என்பவற்றின் அனுசரணையுடன் இரு தரப்பினருக்குமிடையில் பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில்தான் கடந்த மூன்றரை வருடங்களாக எமது போராளிகளினது பாதுகாப்பான பயண ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இவ்வாறாக சுமுகமாக இடம்பெற்றுவந்த போக்குவரத்துக்கான வழித்துணையில் சர்ச்சையைக் கிளப்பி, சமாதான சூழ்நிலையைக் குழப்புவது போர்நிறுத்த ஒப்பந்தத்தின் இருப்பையே ஆட்டங்காணச் செய்கிறது. ஸ்ரீலங்கா அரசாங்கமும் அதன் இராணுவ மற்றும் புலனாய்வு அமைப்புக்களும் சமாதான சூழலைக் குழப்புவது போர்நிறுத்த ஒப்பந்தத்தின் இருப்பையே ஆட்டங்காணச் செய்கிறது. ஸ்ரீலங்கா அரசாங்கமும் அதன் இராணுவ மற்றும் புலனாய்வு அமைப்புக்களும் சமாதானச் சூழலைக் கேள்விக் குறியாக்கி தமிழர் தேசம் மீது மீண்டும் போரைத் திணிக்கும் ஓர் உத்தியாகவே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்களோ என்ற சந்தேகம் எமது மனங்களில் எழுகிறது.

### இராணுவத்தின் பாதுகாப்பில் கருணா

எமது விடுதலை அமைப்பின் ஒழுக்கக் கட்டுப்பாடுகளை மீறிச் செயற்பட்டமையினால் கருணாவை அமைப்பிலிருந்து நீக்கி எமது அமைப்பின் தலைமை ஒழுக்காற்று நடவடிக்கையை எடுத்திருந்தது. எமது அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட ஒருவரை இன்று இராணுவம் பூரண பாதுகாப்பு வழங்கி பாதுகாத்து வைத்திருக்கின்றமையும் கருணா குழுவென இராணுவப் புலனாய்வுப் பிரிவினரே செயற்பட்டு வருகின்றமையும் யாவரும் அறிந்த உண்மை. எமது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்திலோ அல்லது தமிழர் தாயகப் பகுதியிலோ ஏதாவதொரு நிலப்பரப்பை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் குழுவாக கருணா குழு இயங்கவில்லை. அவரை இராணுவமே முழுமையாகப் பயன்படுத்தி வருவதோடு இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பாதுகாப்பில்தான் அவர் இருக்கின்றார் என்பது வெளிப்படையான உண்மை.

கடந்த மூன்றரை வருடங்களாகத் தொடர்ந்து வருகின்ற சமாதானச் சூழலைச் சிதைப்பதற்கான ஒரு பொறிமுறையாகவே இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் திட்டமிட்ட ரீதியில் கருணா குழு என்ற பெயரில் ஒரு குழு உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதனை நாம் பலமுறை ஆதாரங்களுடன் உங்களுக்குச் சுட்டிக்காட்டி வந்துள்ளோம். தேவையேற்படும் பட்சத்தில் இதனை உறுதிப்படுத்தும் வகையில் மேலதிக தகவல்களை நாம் உங்களுக்கு வழங்கவும் தயாராகவுள்ளோம்.

வடக்கு - கிழக்கில் இயங்கிவருகின்ற ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு, எமது தாயகப் பிரதேசப் பகுதிகளிலிருந்து அவர்கள் முற்றாக அகற்றப்படவேண்டும் என்று போர்நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்து 1.8 இல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. போர்நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படுவதற்குப் பெரும் அச்சுறுத்தலாக இந்த ஆயுதக் குழுக்கள் அமைந்துவிடும் என்பதுடன் சமாதானச் சூழலைக் குழப்பும் நோக்கில் அவை செயற்பட்டுவிடும் என்பதையும் நோர்வே அனுசரணையாளர்களும் ஸ்ரீலங்கா அரசாங்கமும் ஏற்றுக்கொண்டபின்னர்தான் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் சரத்து 1.8 சேர்க்கப்பட்டது.

### படைத்தரப்பினால் உருவாகும் குழப்பம்

அவ்வாறிருந்தும், இன்று இப்படியானதோர் ஆயுதக் குழுவைப் படைத்தரப்பே உருவாக்கிப் பெரும் குழப்பங்களை ஏற்படுத்தி வருவதோடு எமது போராளிகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். கடந்த மூன்றரை வருடங்களாக கட்டியெழுப்பப்பட்டு வந்த சமாதானச் சூழலைச் சீர்குலைக்கின்ற அதேநேரம், நடைமுறையிலுள்ள யுத்தநிறுத்த சூழலைக் குழப்புகின்ற நடவடிக்கையாகத்தான் இராணுவப் புலனாய்வுப் பிரிவினதும் படைத்தரப்பினதும் செயற்பாட்டை நாம் கருதுகிறோம்.

கடந்த ஜூன் 26ஆம் திகதி இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதல், எமது மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மீதான தாக்குதல், மட்டக்களப்பு நகர அரசியல்துறை முன்னாள் பொறுப்பாளர் சேனாதி மீதான தாக்குதல், மற்றும் கடந்த 10ஆம் திகதி அன்று திருமலையில் இடம்பெற்ற தாக்குதல் என எமது போராளிகள் மீதான அனைத்துத் தாக்குதல்களும் ஸ்ரீலங்கா அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்தான் இடம்பெற்றுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இச்சம்பவங்கள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்ட விதம், நடத்தப்பட்ட இடம் மற்றும் ஏனைய காரணங்களை வைத்துப் நோக்கும்போது இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் ஸ்ரீலங்காப் படையினருமே இவ்வனைத்துத் தாக்குதல் சம்பவங்களிலும் ஈடுபட்டுள்ளமை சந்தேகத்துக்கிடமின்றி நிரூபணமாகியுள்ளது.

ஸ்ரீலங்கா சமாதானச் செயலகப் பணிப்பாளரின் கடிதத்தில், போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட முன்னர் நிலவிய போர்ச்சூழலில் இடம்பெற்ற சம்பவங்களையெல்லாம் சுட்டிக்காட்டியுள்ளார். இரண்டு தரப்பினருக்கிடையே போர் நடைபெற்ற காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களை இரண்டு தரப்பினரும் சமாதான முன்னெடுப்புகளில் ஈடுபட்டுள்ள இந்த சமாதானச் சூழலில் சுட்டிக்காட்டுவதும் விவாதிப்பதும் சிறந்ததல்ல என்பதோடு அது ஒப்பந்தத்திற்கு விரோதமானதோர் நடவடிக்கையாகவுமே நோக்கப்படுகிறது.

### ஆயுதமில்லாதோர் மீதே தாக்குதல்கள் நடக்கின்றன

அவ்வாறானால், யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் ஸ்ரீலங்காப் படைத்தரப்பினரால் கட்டவிழ்த்துவிடப்பட்ட - தமிழ் மக்கள் மீதான வன்முறைகள், ஸ்ரீலங்காப் படையினர் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதப் படுகொலைகள் என அனைத்தையுமே நாம் சுட்டிக்காட்ட வேண்டிவரும். போர்நிறுத்த ஒப்பந்த விதிகளை நாம் சரியாகக் கடைப்பிடித்து நடப்பதால்தான் ஸ்ரீலங்கா கட்டுப்பாட்டுப் பகுதிகளினுள் அரசியல் பணியில் ஈடுபட்டுள்ள எமது போராளிகள் மீது ஸ்ரீலங்காப் படையினரும், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் தாக்குதல்களை நடத்திவருகின்றனர்.

போர்நிறுத்த ஒப்பந்த விதிகளின் படி, ஸ்ரீலங்கா கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதங்களின்றி அரசியல் பணிபுரியும் போராளிகள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பு ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு உண்டு. அதேநேரம், இவ்வாறாக எமது போராளிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதைக் கண்காணிப்பது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினதும் கடமையாகும்.

இதுபோன்றே எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வரும் ஸ்ரீலங்காப் பிரதிநிதிகளினதும் ஸ்ரீலங்கா அதிகாரிகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பும் எமக்குண்டு. போர்நிறுத்த ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு எமது போராளிகள் தமது உறவினர்கள் மற்றும் நண்பர்களைச் சந்திப்பதற்கு பிற மாவட்டங்களுக்குச் சென்றுவர வேண்டிய தேவை உள்ளது. அத்துடன் அரசியல் மற்றும் நிர்வாகப் பணிகளில் ஈடுபட்டுள்ள எமது போராளிகள் கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள் மற்றும் சந்திப்புகளை மேற்கொள்வதற்காக அடிக்கடி கிளிநொச்சிக்கு வந்துசெல்லவேண்டிய தேவை உள்ளது.

### எமக்கே உரிய பிரத்தியேக வழிகள்

போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் கூட போராளிகளின் இவ்வாறான பயணங்கள் எமக்கேயுரிய பிரத்தியேக வழிமுறைகளினூடாக சுமுகமாக இடம்பெற்று வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் இவ்வாறான எமது போராளிகளின் பயணங்களை போருக்குத் தயார்படுத்துவதற்கான பயணங்கள் என்றும் வன்முறையைத் தூண்டுவதற்கான நடவடிக்கைகள் என்றும் கூறி ஸ்ரீலங்காத் தரப்பினர் தேவையற்ற மாயையைத் தோற்றுவிக்க முயல்வது வருந்தத்தக்கது.

மேற்குறிப்பிட்டதுபோல, மிகவும் அவசியமானதும், தேவையானதுமான எமது போராளிகளினது பாதுகாப்பான பயணங்களை உறுதிப்படுத்தும் வகையிலேயே கடந்த 30 ஜூன் 2005 அன்று அனுப்பிய கடிதத்தில் சில யோசனைகளை நாம் முன்வைத்திருந்தோம். எமது போராளிகளின் பூரண பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டுமானால் எமது யோசனைகள் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். நீண்டநாள்களாகப் பயணங்கள் ஒழுங்குபடுத்தப்படாத நிலையில், எமது பயணங்களை மிக அவசரமாக ஒழுங்குபடுத்தவேண்டிய நிலை எமக்கு இருந்தமையினாலேயே நாம் ஒரு கால அவகாசத்தை ஸ்ரீலங்கா தரப்பினருக்கு வழங்கியிருந்தோம்.

மாதத்தில் ஒரு தடவைதான் பயணம் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும், பயணத்தின்போது குறிப்பிட்ட தொகைப் போராளிகள் மாத்திரமே பயணம் செய்யவேண்டும் என்றும் ஸ்ரீலங்கா தரப்பினர் கட்டுப்பாடுகளைப் போடுவதை நாம் முழுமையாக நிராகரிக்கின்றோம். இது விடயத்தில் ஸ்ரீலங்கா தரப்பினரின் யோசனையானது ஏதோஒரு வகையில் எமது போராளிகளின் பாதுகாப்பான பயணத்தை முடக்குவதற்கு வழி வகுக்கும் ஒன்றாகவே எமக்குத் தெரிகிறது.

ஆகையால் நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர் தீர ஆராய்ந்து எமது போராளிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நாம் கடந்த 30 ஜூன் 2005 அன்று அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்ட யோசனைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு கூடிய விரைவில் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நாம் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறாக நடவடிக்கைகளை எடுப்பதில் மேலும் கால தாமதங்கள் ஏற்படுமானால் நாம் ஏற்கனவே கூறியதைப் போன்று எமக்கே உரிய பாதுகாப்பான பயண வழிமுறைகளைக் கைக்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம் என்பதை உறுதியுடன் கூறிக்கொள்கிறோம். அவ்வாறானதொரு நிலை ஏற்படுமானால் ஸ்ரீலங்கா தரப்பினர் எமது பாதுகாப்புடன் கூடிய போராளிகளின் பயணங்களைத் தடுக்காது இருக்கவேண்டும். மாறாகத் தடுக்கும் நிலை ஏற்படும் சந்தர்ப்பத்தில் நாம் அதற்கான தகுந்த பதில் நடவடிக்கையை எடுக்கவேண்டிய சூழ்நிலையை உருவாக்கும். இந்நிலைமை யுத்தநிறுத்த உடன்படிக்கையை மிகவும் சிக்கலான நிலைமைக்குள் தள்ளிவிடும் என்று நாம் அஞ்சுகின்றோம். - என்றுள்ளது.

(ஐ-க)

# லண்டனின் லீட்ஸ் பகுதி வீடொன்றில் வெடிகுண்டுத் தொழிற்சாலை கண்டுபிடிப்பு!

## தீவிரவாதிகளின் தொடர் தாக்குதல் சதி அம்பலம்

லண்டன்,ஜூலை16

**பிரிட்டனில் தீவிரவாதிகளின் வெடிகுண்டுத் தொழிற்சாலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. லண்டன் குண்டுவெடிப்பைத் தொடர்ந்து மேலும் தாக்குதல் நடத்தத் தீவிரவாதிகள் திட்டமிட்ட சதி இதன்மூலம் அம்பலமாகியுள்ளது. இதற்கிடையில், ரயில் நிலையங்களில் தாக்குதல் நடத்தியதன் பின்னணியில் உள்ள தீவிரவாதியைத் தேடிப் பல இடங்களில் தொடர்ந்து சோதனை நடந்துவருகிறது.**

பிரிட்டன் தலைநகர் லண்டனில், கடந்த 7ஆம் திகதி பயங்கரக் குண்டுவெடிப்பு நடந்தது. தாக்குதலில் தற்கொலைப் படைத் தீவிரவாதிகள் நான்குபேர் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களை இயக்கிய மற்றொரு தீவிரவாதி யார் என்பது குறித்துப் பொலீஸார் தீவிர விசாரணையில் இறங்கியுள்ளனர். இதற்கிடையில், லண்டன் முழுவதும் தீவிரவாதிகள் தேடுதல் வேட்டை முடுக்கிவிடப்பட்டது.

பல பகுதிகளில் பொலீஸார் நடத்திய சோதனையில், லீட்ஸ் பகுதியில் வெடிகுண்டுத் தொழிற்சாலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு வீட்டில் நடத்திய சோதனையில் அங்கு வெடிகுண்டுத் தொழிற்சாலை இயங்கிவந்தது. தெரிந்தது. ஆனால், அபாயகரமான பொருள் ஏதும் அந்த வீட்டில் இல்லை. அதனால், அக்கம் பக்கம் உள்ளவர்களுக்கு எந்தப் பாதிப்பும் வராது என்று பொலீஸார் உறுதிப்படுத்தினர்.

வீட்டில் வெடிகுண்டுத் தொழிற்சாலை இயங் குவதாகச் சந்தேகிக்கப்பட்டதும், லீட்ஸில், ஹைட் பார்க் பகுதியில் அக்கம்பக்க வீடுகளில் இருந்து 600இற்கும் மேற்பட்ட மக்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டனர். பின்னர் பொலீஸார், வெடிகுண்டு நிபுணர்கள், மோப்ப நாய்களுடன் உள்ளே சென்று தீவிர சோதனை நடத்தினர். அதில் அபாயகரமான பொருள்கள் எதுவும் வீட்டில் இல்லை என்பது தெரியவந்தது.

சந்தேகத்துக்கு இடமான அந்த வீட்டில் வெடிகுண்டு தயாரிப்புப் பணிகள் நடந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அதன் மூலம், பிரிட்டனின் பல பகுதிகளில் தொடர்ந்து தாக்குதல் நடத்தத் தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்த சதியும் தெரியவந்தது. மேலும், ரயில் நிலையங்களில் தாக்குதல் நடத்தத் தீவிரவாதிகள் பயன்படுத்திய கார் ஒன்று லூடன் ரயில் நிலையம் அருகில் கண்டுபிடிக்கப்பட்டது. அந்தக் காரில் ஏராளமான வெடிகுண்டுகளைப் பொலீஸார் கைப்பற்றினர். (8)

# மலேசியாவில் மாதந்தோறும் 120 மாணவர்கள் கைது!

கோலாலம்பூர்,ஜூலை16

மலேசிய நாட்டில் பல்வேறு குற்றங்களுக்காக மாதந்தோறும் 120 பாடசாலை மாணவர்கள் கைதுசெய்யப்படுகின்றனர்.

போதை மருந்து சாப்பிடுவது, சக மாணவர்களுடனும் வீதியில் போகிறவர்களுடனும் வம்புச்சண்டைக்குப் போவது, கும்பலாகச் சேர்ந்து அடிதடியில் இறங்குவது, இளம் பெண்களைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத் துவது ஆகியவையே மாணவர்கள் செய்யும் குற்றச்செயல்கள்.

இது காவல்துறையில் உள்ள எங்களுடைய பிரச்சினை மட்டுமல்ல, பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூகவியலாளர்கள் ஆகியோருடைய பிரச்சினையும் கூட என்கிறார் மலேசியப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் முகம்மது பக்ரி உமர். எல்லா வழிகளிலும் இக்குற்றங்களைக் குறைக்க ஒருங்கிணைந்த நடவடிக்கை அவசியம் என்கிறார் உமர். (8)

# தென்னாபிரிக்காவில் 2 ரயில்கள் மோதல்; 162 பேர் காயம்!

தென்னாபிரிக்காவில் ஜோஹன்ஸ்பேர்க் நகருக்கு வெளியே உள்ள சோபெட்டே ரயில் நிலையத்தில் 2 ரயில்கள் மோதிக்கொண்டதில் 162பேர் காயமடைந்தனர்.

உலக அரங்கில்

# இராமேஸ்வரம் கோயில் கருவறைக்குள் செல்ல ஜெயேந்திரருக்கு அனுமதி மறுப்பு

இராமேஸ்வரம்,ஜூலை16

இராமேஸ்வரம் இராமநாத சுவாமி கோயிலில் கடந்த வியாழக்கிழமை கருவறைக்குள் செல்ல முயன்ற காஞ்சி ஜெயேந்திரருக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இதையடுத்து, அவர் தனுஷ்கோடிப் அரிச்சல் முனைக்குச் சென்று கடலில் நீராடி பூஜை செய்தார்.


ஆடி மாத பௌர்ணமி, முதல் சதுர்மாத விரதத்தை முன்னிட்டுப் பாபதோஷ நிவர்த்தி, பிராயச்சித்த பரிகார பூஜைகள் செய்வதற்காக கடந்த வியாழக்கிழமை அதிகாலையில் இரா மேஸ்வரத்திற்கு ஜெயேந்திரர் வந்தார்.

இராமநாதசுவாமி கோயிலுக்குச் சென்ற அவருக்குக் கோயில் சார்பில் வழக்கமாக வழங்கப்படும் பூரண கும்ப மரியாதை, யானை மாலையிட்டு மேளதாளத்துடன் வீரவேற்கும் நிகழ்ச்சிகள் ஆகியவை நடைபெறவில்லை.

மேலும், கோயிலுக்குள் சென்ற அவரைக் கோயில் குருக்கள், அர்ச்சகர்கள், பணியாளர்கள் ஆகியோர் கருவறைக்குள் செல்லவிடாமல் தடுத்து நிறுத்தினர்.


இதையடுத்து ஜெயேந்திரருடன் சென்ற வேத விற்பன்னர்கள் இராமநாதபுரம் மாவட்ட பா.ஜ.க. தலைவர் கே.முரளிதரன் ஆகியோர் கோயில் ஊழியர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால், அங்கு பரப்பரப்பு ஏற் பட்டது.

இதைப் பார்த்த ஜெயேந்திரர் அவர்களைச் சமாதானம் செய்தபடியே கோயிலைவிட்டு வெளியேறிச் சன்னதி தெருவில் உள்ள சங்கர மடத்துக்குச் சென்றார். (8)



லண்டன் குண்டுவெடிப்பில் பலியானவர்களுக்கு நேற்றுமுன்தினம் ஐரோப்பியா முழுவதும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் அவரது இல்லத்தில் பொலீஸாருடன் அஞ்சலி செலுத்தியபோது...

# மரண அறிவித்தல்



## இராஜரட்ணம் விஜயகுமார்

- கோப்பாய் விஜி -

கோப்பாய் தெற்கு, இருபாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் விஜயகுமார் (கோப்பாய் - விஜி - நிறைவேற்றுப் பணிப்பாளர், NATURE LANKA TRAVELS&TOURS (PVT) LTD. CO.6) அவர்கள் 10.07.2005 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2005) சனிக்கிழமை அவருடைய இல்லத்தில் நண்பகல் 12.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
மனைவி, மக்கள், சகோதரர்கள், உறவினர்கள்.

ஆசிரியர் கலாசாலை வீதி,
இருபாலை, கோப்பாய். (37786) (11-45-33)

# 3 ஆண்டுகளில் 114 பேருக்கு மரணதண்டனை விதிப்பு

## பங்களாதேஷ் நீதிபதி சாதனை

பங்களாதேஷ் விரைவு நீதிமன்ற நீதிபதி யான ஷாஹீத் நூருதீனின் பெயரைக் கேட் டாலே கிரிமினல் வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்குக் கலக்கம்தான்.

கடந்த 3 ஆண்டுகளில் 114 பேருக்கு அவர் மரணதண்டனை விதித்திருக்கிறார். நாட்டின் மொத்தமுள்ள 9 விரைவு நீதிமன்றங்களும் இதே காலகட்டத்தில் அளித்த மரணதண்டனைகளின் எண்ணிக்கை 326 தான்.

2001இல் நடந்த கொலை வழக்குத் தொடர்பாக ஒரே நாளில் 15 பேருக்கு மரண தண்டனை விதித்திருப்பது அவருடைய சமீபத்திய சாதனை. (8)

# தென்கொரியாவில் 2 விமானங்கள் அடுத்தடுத்துக் கடலில் வீழ்ந்தன!

தென்கொரிய விமானப்படையின் இரண்டு போர் விமானங்கள், ஒன்றன் பின் ஒன்றா கக் கடலில் வீழ்ந்தன. இரண்டு விமானிகள் பலியாயினர்.மற்றஇருவர் தேடப்படுகின்றனர்.

தென்கொரியா விமானப் படையைச் சேர்ந்த இரண்டு போர் விமானங்கள் கடந்த புதன்கிழமை இரவு பயிற்சியில் ஈடுபட்டன. அப்போது, இரண்டு விமானங்களும் ஒன்றன்பின் ஒன்றாக விபத்துக்குள்ளாகின. ஒரு விமானம் கடலில் விழுந்தது. அதிலிருந்த இரண்டு விமானிகளும் விமானத்துடன் கடலுக்குள் சென்றுவிட்டனர். அவர்கள் பலியாயினர்.

இச்சம்பவம் நடந்த எட்டு நிமிடங்களில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த மற்றொரு விமானமும் கடலில் வீழ்ந்தது. அதிலிருந்த இரண்டு விமானிகள் குதித்துவிட்டதாகத் தெரிகிறது. அவர்களைத் தேடும் பணியை விமானப்படை மேற்கொண்டுள்ளது. விபத்துக்கான காரணம் தெரியவில்லை. அவர்களும் பலியாகி இருக் கக்கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

விபத்துக் குறித்துப் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் முடிவு தெரியமுன், விபத்துக்கான காரணத்தைக் கூறமுடியாது. இரண்டு விமானங்களின் விமானிகளும், இரவில் தெளிவாகப் பார்க்க உதவும் அதிநவீன கண்ணாடியை அணிந்திருந்தனர் என்று விமானப் படைத் தகவல் தொடர்பாளர் கூறினார். (8)



# பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ். மாவட்ட பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட பட்டதாரி பயிலுநர் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பட்டதாரிகள் அன்றையதினம் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ஒ)

NEW POWER WORLD
FITNESS & HEALTH CARE CENTRE
யாழ்.நகரில் ஆண், பெண் இருபாலாருக்குமான நவீன முறையில் அமைந்த உடற்பயிற்சிக்கூடம்
ஆரம்பம்: 16-07-2005 பி.ப. 4.00 மணிக்கு
- யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த பயிற்றுவிப்பாளரின் நேரடி வழிநடத்தல்
- விஞ்ஞானமுறையில் அமைந்த பயிற்சித் திட்டங்கள் ஆலோசனைகள், வழிகாட்டல்கள்
- நவீன உபகரணங்களின் மூலமான பயிற்சிகள்
- ஆண்களின் உடல் அழகைப் பேண, பெண்களின் உடல் அழகைப் பேண, உடல் பருமனைக் குறைக்க, நவீன பயிற்சித் திட்டங்கள்
- இதயநோய், நீரிழிவு நோய், இரத்த அழுத்த நோய்களினால் அவஸ்தைப்படும் முதியவர்களுக்கான விசேட உடற்பயிற்சிகள்.
- யாழ்.போதனா வைத்தியசாலை, நிபுணர்களின் ஆலோசனையும், ஒருங்கிணைந்த பயிற்சித் திட்டமும்
- நவீன மலசலகூட வசதிகள், வெப்பக் குளியல் வசதிகள் (Hot water bath) உடைமாற்று அறைகள்.
- இளைஞர்களே மெலிந்தவர்கள் என்ற கவலையை விடுங்கள். உங்கள் உடற் தசைகளை விருத்திசெய்து ஆணழகர்களாக மாற விசேட பயிற்சிகள்.

பிரதம பயிற்றுவிப்பாளர்:
யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த பயிற்றுவிப்பாளரான
திரு.மா.இளம்பிறையன்
(உடற்கல்வி விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)

விசேட சலுகை
ஆரம்பநாளில் இணைபவர்களுக்கு
10% கட்டணக் கழிவு

உங்களை எங்களிடம் ஒப்படையுங்கள்
131, கே.கே.எஸ். வீதி. யாழ்ப்பாணம்.
[மனோகரா தியேட்டர் அருகில்]
T.P.: 4591806. (C/42071)(50)

ஏல விற்பனை
எங்கே.....
எப்போது....
எவ்வகைப்பொருள்கள்....
⇨ இலத்திரனியல் பொருள்கள்
⇨ மின்னியற் பொருள்கள்
⇨ ஊர்தி உதிரிப்பாகங்கள்
⇨ புடைவை வகை
⇨ அழகுசாதனப் பொருள்கள்
நாளை எதிர்பாருங்கள். (42077) (24-14-15)

கண்ணீர் அஞ்சலி



சாரங்கா நகைமாடம்,
சாரங்கன் நகைமாடம்
உரிமையாளர்களின் சகோதரன்
பஞ்சாட்சரம் சிவகுமார்
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில்
நாமும் பங்குகொள்வதோடு,
அன்னாரின் ஆத்மாசாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.
115, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (37785) (24-14-15)
சிறி முருகன் நகைமாளிகை
குடும்பத்தினரும் ஊழியர்களும்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
பிறப்பு 10 - 11 - 1918

இறப்பு 28 - 07 - 2004
அமரர் ஆறுமுகம் கந்தசாமி
ஓராண்டு வந்து ஓடி மறைந்தாலும்
ஒளி வீசும் முகத்தை மறக்கத்தான் முடியுமா?
தீராத வேதனையால் தினந்தினம் துடிக்கின்றோம்.
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.
விக்கினேஸ்வரா லேன்,
இணுவில் மேற்கு,
இணுவில் (37752)(46-14-15-24)
-குடும்பத்தினர்.

## 60 வீடுகள் அமைக்கும் திட்டம்

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள நான்கு கிராம அலுவலர் பிரிவுகளில் 60 வீடுகளை அமைக்கவுள்ளனர்.

இந்தக் கிராம அலுவலர் பிரிவுகளில் பயனாளிகளைத் தெரிவுசெய்யும் பணிகள் நடைபெற்று வருவதாகவும்- கோவில்குடியிருப்பு, கல்வயல் ஆகிய பிரிவுகளில் வீடமைப்புக்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுவிட்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## 2ஆம் தவணைத் தேர்வுத் திகதிகள்

வலி.தெற்கு,ஜூலை16

ஆய்வறிசோதனை அடிப்படையில் ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கும் மாணவர் கல்விச் செயற்பாடுகள் தொடர்பாகக் கணிப்பீடு ரீதியான மதிப்பீட்டுத் தேர்வினை அறிந்து கொள்வதற்கும் 2ஆம் தவணைத் தேர்வுகள் பாடசாலைகளில் ஆரம்ப பிரிவு மற்றும் 9ஆம் தர வகுப்பு மாணவர்களுக்கு நடைபெறவுள்ளன.

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் தரம் 9 இற்கான இரண்டாம் தவணைத் தேர்வுகள் இம்மாதம் 18 ஆம் திகதியும் ஆரம்பப் பிரிவு (தரம் 2-5) தவணை தேர்வுகள் 22ஆம் திகதியும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. (ஒ-152)

அனைவருக்கும் புலமைப்பரிசில்
COMPUTER EXPRESS
Institute of Information Technology
A\L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான விசேட பிரிவுகள் கீழ்க்குறிப்பிட்ட தினங்களில் ஆரம்பமாகின்றன.
புலமைப்பரிசில் திட்டம் - 2005
80% OFF

| பாட நெறிகள் | | பாடநெறிக் கட்டணம் | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 5மாதம் | 6,000 | 1,200 |
| Honours Diploma in Computer Science | - 6மாதம் | 8,000 | 1,600 |
| Diploma in WebPage Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Desk top Publishing | - 4 மாதம் | 5,000 | 1,000 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| Accounting Package | - 3 மாதம் | 7,000 | 1,400 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| MS Office | - 3 மாதம் | | 500 |

Advances Courses
50% OFF

| | | |
|---|---|---|
| Diploma in Net Working | 4000 | 2000 |
| Diploma in Video Editing | 6000 | 3000 |
| Diploma in Multimedia | 5000 | 2500 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.
July 31ம் இற்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.
வகுப்புக்கள் ஆரம்பம்
Batch II - 15/07/2005
Batch I(a) - 16/07/2005
Batch III - 17/07/2005
Batch IV - 31/07/2005
Maniyam Building
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
0777 222422, 0773151647
(சி/42013)

## சாவகச்சேரிச் சந்தையில் வாகனத் தரிப்பிடம்

தென்மராட்சி,ஜூலை16

சாவகச்சேரி நகர வர்த்தகர்களின் நலன் கருதி சாவகச்சேரி பொதுச்சந்தையில் இருசக்கர வாகனப் பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையத்தினைச் சாவகச்சேரி நகர சபையினர் சபை நிதியில் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன், சாவகச்சேரி நகருக்கு வரும் பொதுமக்களின் நலன்கருதி இருசக்கர வாகனப் பாதுகாப்பு நிலையமும் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த இரு பாதுகாப்பு நிலையங்களும் இயங்கத் தொடங்கியதும் நவீன சந்தைப் பகுதியில் இருசக்கர வாகனங்கள் நிறுத்துவது தடைசெய்யப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## 4 சமுர்த்தி வங்கிகளுக்கு விரைவில் கணனிகள்

தென்மராட்சி,ஜூலை16

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள 4 சமுர்த்தி வங்கிகளுக்குக் கணனிகள் கிடைக்கவுள்ளன.

கணனிகள் கொள்வனவுக்கான நிதியினை நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## இலவச பாமாலை நூல்

வலி.தெற்கு,ஜூலை16

'தமிழ் அர்ச்சனை மலர்' என்ற பாமாலை நூலை இணுவில் அண்ணா தொழிலக அதிபர் பொ.நடராசா இலவசமாக அச்சிட்டு வழங்கியுள்ளார்.

இவரது இந்தப் பாமாலை நூல் இணுவில் கந்தசுவாமி கோயிலின் இவ்வருட தேர்த்திருவிழா நாளன்று வெளியிட்டு விநியோகிக்கப்பட்டது. (ஒ-152)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## தீர்ப்பால் கிட்டும் படிப்பினை

'கடலில் தொலைத்ததை ஆற்றில் தேடும் வேலை' இப்போது நமது இலங்கைத் தீவில் நடக்கின்றது. இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாண்பது தொடர்பாக நடக்கும் முயற்சிகளையும், எத்தனங்களையும், அது சம்பந்தமாக இடம்பெறும் நிகழ்வுகளையும் பார்க்கும்போது இப்படித்தான் எண்ணத் தோன்றுகின்றது.

ஆழிப்பேரலை அவலம் நேர்ந்து ஆறு மாதங்கள் கடந்த பின்னர் ஆற அமர உருவான பொதுக்கட்டமைப்பு ஏற்பாட்டின் பல ஷரத்துகளுக்கும் அவற்றின் கீழான செயற்பாடுகளுக்கும் இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் உயர் நீதிமன்றம் தடை விதித்துவிட்டது. அதன்மூலம் பொதுக்கட்டமைப்பின் செயற்பாடு நிரந்தரமாக ஆறப்போடப்பட்டுவிட்டது. ஆழிப்பேரலைப் பாதிப்புகளால் அவலமுற்று நிவாரண மற்றும் உதவிகளுக்குக் காத்திருந்த அப்பாவி மக்களின் நிலைமை இலவு காத்த கிளியாகி விட்டது.

ஆழிப்பேரலையால் பாதிப்புற்றோருக்குப் பொதுக்கட்டமைப்பு ஏற்பாடுகள் மூலம் ஏதேனும் நிவாரணம் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தோருக்கு மிஞ்சியிருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையும் இத்தோடு தகர்ந்துபோயிருக்கும் என்பது நிச்சயம்.

ஈழத் தமிழருக்கு நியாயம் கிடைக்கக் கூடாது என்பதில் தீவிரமாக இருக்கும் சிங்கள, பௌத்த மேலாண்மைவாதிகளுக்கு நீதிமன்றத்தின் இந்த உத்தரவு - தீர்ப்பு - பேருவகை தந்திருக்கும் என்பதும் நிச்சயம்.

நீதிமன்றம் என்ன செய்யும் - பாவம். தனக்குத் தரப்பட்ட சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய அது வியாக்கியானங்கள், விளக்கங்களைக் கொடுத்துத் தன்னை நிலைநிறுத்தி நியாயப்படுத்திக் கொள்ளும். அவ்வளவே. சட்டத்திற்கு வெளியில் வந்து, யதார்த்தத்தை உணர்ந்து, அதன்படி செயற்படவேண்டும் என்று எதிர்பார்ப்பது நிறைவேறப்போவதில்லை.

ஆனால், பொதுக்கட்டமைப்பு விடயத்தில் உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பைக் கவனத்தில் எடுத்து அதனடிப்படையில் விடயங்களை அணுக முற்படுகின்றவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இன்று ஈழத்தமிழர்களின் ஏகபிரதிநிதிகளாக இருக்கும் விடுதலைப் புலிகள் மட்டும் அல்லர், அதற்கு முன்னர் பல தசாப்த காலமாக ஈழத் தமிழர்களின் தலைவர்களாக இருந்த தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம், அமிர்தலிங்கம் போன்றோர்கூட வலியுறுத்தித் திரும்பத்திரும்பக் கூறிவந்த விடயம்தான் அது.

1971 இல் இலங்கைத் தீவில் தான்தோன்றீஸ்வரர் போல - சுயம்புவாக - கொண்டுவரப்பட்ட அரசமைப்புச் சட்டமோ அல்லது அதையடுத்து அதன்கீழ் 1978 இல் கொண்டுவரப்பட்ட தற்போதைய அரசமைப்புச் சட்டமோ இலங்கைத் தீவில் வாழும் தமிழ்மக்களின் உடன்பாட்டுடனோ அல்லது இணக்கத்துடனோ நடைமுறைப்படுத்தப்பட்டவையல்ல. சிங்கள, பௌத்த பேரினவாதிகளால் அவர்களின் நோக்கத்துக்கும், இலக்கிற்கும், விருப்பிற்கும் அமைவாகத் தோற்றுவிக்கப்பட்டு, ஈழத் தமிழர்கள் மீது திணிக்கப்பட்டவையே அந்த அரசமைப்புகள்.

அந்த அரசமைப்புகள் தங்களை எந்த வகையிலும் கட்டுப்படுத்தா என்பதுதான் புலிகள் உட்பட தமிழ்த் தலைவர்களின் ஏகோபித்த நிலைப்பாடு. தமிழர்களால் ஏற்றுக்கொள்ளப்படாத - தமிழர்கள் மீது வலிந்து திணிக்கப்பட்ட - ஓர் அரசமைப்பின் கீழ், அவர்களின் பிரச்சினைகளுக்கு - அவர்களது நியாயமான அபிலாஷைகளை நிறைவுசெய்கின்ற -ஒரு தீர்வைத் தேடிக்கண்டு பிடிப்பது என்பது இயாலாத காரியம். அப்படி அந்த அரசமைப்புக்குள் ஒரு தீர்வைத் தேடுவது என்பது 'கடலுக்குள் தொலைந்ததை ஆற்றுக்குள் தேடுவதற்கு'ச் சமனாகும். கடலுக்குள் தொலைந்ததைக் கடலுக்குள்தான் தேடிக் கண்டுபிடிக்கமுடியும்.

தமிழர் மீது பேரினவாதிகளினால் வலிந்து திணிக்கப்பட்ட இந்த அரசமைப்பும் அதன் கீழான சட்டங்களும் தாம் தமிழர்களின் பிரச்சினைகளுக்கும் போராட்டங்களுக்கும் அவர்களின் உரிமைகள் பாதிக்கப்பட்டமைக்கும் அவர்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கும் மூலகாரணம்; அடிப்படை.

அப்படி என்றால், அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அந்த அரசமைப்புச் சட்டத்திற்கு வெளியே வந்துதான் தீர்வைத்தேடவேண்டும். பிரச்சினையை உருவாக்கிய தளைகளாலேயே நம்மைக் கட்டிவைத்துக்கொண்டு அதிலிருந்து மீளுவதற்கு வழிதேடுவதில் அர்த்தமில்லை.

ஆழிப்பேரலைப் பொதுக்கட்டமைப்பாகட்டும், இடைக்காலத்தீர்வுத் திட்டமாகட்டும், அல்லது நிரந்தரத் தீர்வுக்கான யோசனையாகட்டும், அவை இந்த அரசமைப்புக்கு வெளியில் வந்தால்தான் சாத்தியப்படும். இந்த அரசமைப்புக்குள் அது போட்டு வைத்திருக்கும் சட்ட திட்டங்கள், கட்டுப்பாடுகளுக்குள் தீர்வைத் தேடினால் எங்கோ தொலைத்ததை வேறு எங்கோ தேடுவதாகத்தான் அது இருக்கும். பயனற்றதாகவே அது முடியும். இந்த உண்மையைத் தெட்டத்தெளிவாக நாட்டுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் உணர்த்தியிருக்கின்றது இந்த உயர்நீதிமன்றத் தீர்ப்பு.

இலங்கை அரசுடனான தற்போதைய சமாதானப் பேச்சுக்களில் ஆரம்பத்திலேயே இதைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தெளிவுபடுத்தியிருந்தார்.

தலைவர் வே. பிரபாகரனும் தமது மாவீரர் தின உரைகளில் இதனைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் அரசமைப்பைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பதை விடுத்து-

இலங்கையில் இரண்டு நிர்வாக மையங்கள், இரண்டு படைகள், இரண்டு ஆட்புலக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள், சமாந்தர அரச நிர்வாகங்கள், இரண்டு தனித்தனி சட்ட - ஒழுங்கு ஏற்பாடுகள் என்பவை எல்லாம் உள்ளன என்ற யதார்த்தத்தை ஒப்புக் கொண்டு -

அதனடிப்படையில், புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதற்கு இலங்கையின் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வந்ததால்தான் அந்த ஒப்பந்தமும் சாத்தியமாகியது.

அதன்கீழ் மூன்றரை வருடங்களாக யுத்த நிறுத்தமும் சாத்தியமாயிற்று. அமைதி முயற்சிகளுக்கு வாய்ப்பும் கிட்டியுள்ளது.

எனவே, இனப்பிரச்சினைக்கு இடைக்காலத் தீர்வோ, நிரந்தரத் தீர்வோ எது கிடைப்பதானாலும் இவ்வாறு அரசமைப்புக்கு வெளியே வந்து செயற்படுவதற்கு சிங்களத் தலைமைகள் தயாராகவேண்டும். அதற்கான வலுவும் தைரியமும் அதிகாரமும் கொண்ட சிங்களத் தலைமை தெற்கில் உருவாகாதவரை - பேரினவாத அரசமைப்பு என்ற பெயரில் தனக்குத்தானே போட்டுள்ள தளைக்குள்- கட்டுக்குள் - கட்டுண்டு கிடக்கும் தலைமைகள் அதற்குள் நின்று அரசியல் பித்தலாட்டங்களை ஆடுவதைத் தவிர அவற்றுக்கு வேறு மார்க்கமே இல்லை. நீதிமன்றத் தீர்ப்பு உறுதிப்படுத்தியிருக்கும் இந்த உண்மை சர்வதேச சமூகத்தின் கவனிப்புக்குச் சமர்ப்பணம்.

# தென்மராட்சி கிழக்குப் பிரதேச செயலகம் உருவாகப் பூரண ஒத்துழைப்பு வழங்குவேன்

## பிரதேச செயலர் ஸ்ரீநிவாசன் வாக்குறுதி

வரணி,ஜூலை16

தென்மராட்சி கிழக்குக்கென தனிப் பிரதேச செயலகம் அமைக்கப்பட மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு தனது பூரண ஒத்துழைப்பை வழங்குவார் என்று தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் உறுதியளித்தார்.

தென்மராட்சி கிழக்குப் பிரதேச அபிவிருத்தி ஒன்றியத்தினரால் கொடிகாமத்தில் அண்மையில் நடத்தப்பட்ட கலந்துரையாடல் ஒன்றில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் மேற்படி ஒன்றியத் தலைவர் க.சந்திரசேகரா தலைமையில் சாவகச்சேரி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய பிரதேச செயலர் கூறியதாவது:-

சாவகச்சேரியில் தற்காலிகக் கட்டடத்தில் தென்மராட்சிப் பிரதேச செயலகம் இயங்கிவருகிறது. இங்கு போதுமான இட வசதி இல்லை.

தென்மராட்சிப் பிரதேச செயலகம் சொந்தக் கட்டடத்திற்கு விரைவில் மாற்றப்படவுள்ளது. அப்போது கொடிகாமத்தில் இயங்கும் உப பணிமனை மூடப்படும். அதன் பின்னர் கொடிகாமத்தில் அவ்வப்போது நடமாடும் சேவை நடத்தப்படும்.

28 கிராம சேவையாளர்கள் பிரிவை உள்ளடக்கிய கொடிகாமம் பகுதி மக்களின் நன்மை கருதியே கொடிகாமத்தில் உப பணிமனை அமைக்கப்பட்டது. இந்தப் பணிமனையால் பொது மக்களின் தேவையை முழுமையாக நிறைவேற்ற முடியாமல் உள்ளது. ஆளணிப் பற்றாக்குறையே இதற்குப் பிரதான காரணம்.

இதேவேளை, தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கு தனியானதொரு பிரதேச செயலகம் அமைக்கும் முயற்சியில் தென்மராட்சி கிழக்குப் பிரதேச அபிவிருத்தி ஒன்றியத்தினர் ஈடுபடுகின்றனர். அவர்களின் முயற்சிக்கு எனது பூரண ஒத்துழைப்புக் கிடைக்கும் என உறுதி கூறுகின்றேன் - இவ் விடயம் நிறைவேற அரசியல் ரீதியான அழுத்தம் தேவை என்று அவர் கூறினார்.

இக் கலந்துரையாடலுக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சிவாஜிலிங்கம், யாழ்.மாட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர். தென்மராட்சி கிழக்குக்கு தனிப் பிரதேச செயலகம் அவசியம் என்று ஒன்றியத்தினால் பூரண தரவுகளுடன் தயாரிக்கப்பட்ட மகஜர் க.சிவாஜிலிங்கம் எம்.பியிடம் சம்பந்தப்பட்ட அமைச்சிற்கு அனுப்புவதற்காகக் கையளிக்கப்பட்டது.

(ஒ-170)

## நல்லூர் திருவிழாவுக்கு இலவச மின்; யாழ்.மாநகர சபை கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை16

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழாக் காலத்தின்போது ஆலயச் சூழலுக்கு இலவச மின்சாரம் வழங்குமாறு யாழ்.மாநகரசபை இலங்கை மின்சாரசபையைக் கேட்டுள்ளது.

நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் பெருந் திருவிழா அடுத்தமாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இவ்வாலயத்தின் பெருந்திருவிழாக் காலத்தின்போது ஆலயச் சுற்றாடலுக்கு இலங்கை மின்சார சபையினால் பல வருடங்களாக இலவசமாக மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. கடந்த ஆண்டுப் பெருந் திருவிழாவின் போது வழங்கப்பட்ட மின்சாரத்திற்கு இலங்கை மின்சாரசபை யாழ். மாநகர சபையிடம் கட்டடணம் வழங்குமாறு கோரியுள்ளது.

இவ்வாறான நடைமுறை இல்லாத போதும் இலங்கை மின்சாரசபை கடந்த வருடம் பெருந்திருவிழாவின் போது வழங்கப்பட்ட மின்சாரத்திற்குரிய கட்டணத்தைக் கேட்டுள்ளது.

எனவே, இம்முறை பெருந்திருவிழாவின்போது ஆலயச் சுற்றாடலுக்கு வழங்கப்படும் மின்சாரத்தை இலவசமாக வழங்குமாறு யாழ்.மாநகர சபை ஆணையாளர் க.குணராசா மின்சார சபையின் தலைமையகத்தைக் கேட்டுள்ளார்.

(ஒ-7)

## வீடமைப்புத் திட்டங்களை அனுமதி பெற்றுச் செயற்படுத்துக

### தென்மராட்சி பிரதேசசபை வலியுறுத்து

தென்மராட்சி,ஜூலை16

சாவகச்சேரிப் பிரதேச சபை எல்லைக்குள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் வீடமைப்புத் திட்டங்களை பிரதேச சபையின் அனுமதிபெற்று நடைமுறைப்படுத்துமாறு தென்மராட்சிப் பிரதேச செயலரிடம் பிரதேச சபைச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உலகவங்கி மற்றும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் போன்றவை தென்மராட்சிப் பிரதேசத்தில் வீடமைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றன.

இத்தகைய திட்டங்களின் கீழ் உசன், மிருசுவில், கைதடி, மட்டுவில் வடக்கு, மட்டுவில் மத்தி, சந்திரபுரம், மட்டுவில் கிழக்கு, மந்துவில் கிழக்கு, மந்துவில் மேற்கு ஆகிய பகுதிகளில் வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த வீடமைப்புத் திட்டங்களை பிரதேச சபையின் அங்கீகாரம் பெற்ற பின்னர் மேற்கொள்ளுமாறு பிரதேச சபைத் செயலாளர் பிரதேசச் செயலரிடம் கோரியுள்ளார். (ஒ-117)

## லண்டனில் காணாமற்போன யுவதி இறந்தாரென அறிவிப்பு

லண்டனில் கடந்த வாரம் தீவிரவாதிகள் நடத்திய குண்டுத் தாக்குதலின்போது காணமற்போயிருந்த தமிழ் யுவதியான பத்மா பரமசங்கரி என்பவர் உயிரிழந்துள்ளார் என்று -

லண்டனில் வெளியாகும் 'ருடே ஈவினிங் ஸ்ராண்டட்' செய்தித்தாள் தகவல் வெளியிட்டுள்ளது.

தபாலகம் ஒன்றில் பணிபுரிந்து வந்த இவர் குண்டுவெடித்த சமயம் சுரங்க ரயிலில் பயணம் செய்துகொண்டிருந்தார். அதன்பின் அவர் காணாமற் போய்விட்டார் என்று தாயார் முறைப்பாடு செய்திருந்தார். (ஐ-190)

## தெல்லிப்பழை வைத்தியசாலையின் கிளினிக்குகள் புதிய இடத்தில்

யாழ்ப்பாணம்,ஜூலை16

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையின் வெளிநோயளர் பகுதி, பற்சிகிச்சைப் பிரிவு மற்றும் கிளினிக்குகள் யாவும் இன்று சனிக்கிழமை தொடக்கம் உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் - கட்டுவன் வீதியில் - அதன் சொந்தக் கட்டடத்திலேயே இயங்க உள்ளன.

வெளிநோயாளர்கள் மற்றும் பற்சிகிச்சை நோயாளர்கள் அனைவரையும் இன்று தொடக்கம் புதிய இடத்தில் சமுகமளிக்குமாறு மாவட்ட மருத்துவ அதிகாரி அறிவித்திருக்கிறார்.

1990ஆம் ஆண்டு தெல்லிப்பழை இராணுவக்கட்டுப்பாட்டில் வந்த பின்னர் இந்த வைத்தியசாலை முதலில் மானிப்பாயிலும்-

பின்னர் தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைக் கட்டடத்திலும்- இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-7)

## கிளிநொச்சியில் தொலைபேசி சீர்

கிளிநொச்சி, ஜூலை16

கிளிநொச்சிக்கான தொலைத்தொடர்புச் சேவை நேற்று முற்பகல் சீரானது.

கடும் மழை காரணமாக தொலைத்தொடர்புக் கோபுரத்தில் ஏற்பட்ட சேதத்தை ரெலிக்கொம் நிறுவன ஊழியர்கள் நேற்றுக்காலை திருத்தியதால், சேவை சீராகியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

### உதயவாக்கு

பெரியவிஷயங்களைப் போலவே சிறிய விஷயங்களையும் கவனிக்கக் கூடிய மனமே உண்மையும் உரமும் பொருந்திய மனமாகும்.

-டாக்டர் ஜாக்சன்.

### நாளை

ஆடி 01
ஞாயிற்றுக்கிழமை
17.07.2005
திதி: ஏகாதசி
பின்னிரவு 1.53 வரை
நட்சத்திரம் : விசாகம்
முற்பகல் : 8.39 வரை
ஏகாதசி விரதம்
சுபநேரம்: 9.00 - 10.30
ராகுகாலம்: 4.30 - 6.00
(யாவும் பழைய நேரப்படி)



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

நஷனல் குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: 20, கொழும்புத் துறை வீதி, சுண்டுக்குளி. (37720)

எம் ரி-90 (Honda) ரக்ரர், (240) மைனர் கார் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: வை. இராஜேஸ்வரன் (அப்புசாமி) அழகியவான் தோட்டம், கோப்பாய் தெற்கு, கோப்பாய். T.P.: 077 6916943. (37742)

### வீடு, காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கில் 2 பரப்பு 11 குழி காணியிலமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 011 4613157 (மாலை 6 மணிக்குப் பின்பு தொடர்புகொள்ளவும்). (37614)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா சந்திக்கு அண்மித்துள்ள வெள்ளாந்தெருவில் 3¾ பரப்புக் காணியுடன் கூடிய 3 மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு.தம்பிப்பிள்ளை, 188 B, மானிப்பாய் வீதி (வைத்தீஸ்வரா சந்தி), யாழ்ப்பாணம். (37744)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

Great Dane நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (37754)

45 நாள்கள் நிரம்பிய அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: பொன்னுத் துரை கமலநாதன், கலையரசு வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய். (37776)

### இறைச்சிக்கோழிவிற்பனைக்கு

புறொயிலர் 1 Kg 160/- சுத்தம் செய்தது 240/- மொத்தமாகக் கொள்வனவு செய்பவருக்கு விலைக்கழிவு உண்டு. மற்றும் புறொயிலர் குஞ்சு விற்பனைக்குண்டு. தொடர்பு: New R.S.K Farm, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். New R.S.K Farm, பெரிய மதவடி, மானிப்பாய் றோட், உடுவில் . (37663)

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (37756)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தினமும் சுத்தம் செய்து மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம். மாஸ் வகைகளும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: S. சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல் செற் அருகிலுள்ள புலவனார் வீதி. (37781)

தரமான புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. 1 Kg 140/- சுத்தம் செய்யப்பட்டது. 1 Kg 220/- மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: P. ரவி, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி. (சி-42070)

### கடை விற்பனைக்கு

வீதிச் சான்றிதழ் பெற்ற கடை. தொடர்பு: இல. 325, தியாகு கலைக்கூடம்,பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். T.P.: 222 6469. (37535)

### வாடகைக்கு உண்டு

கோயில் வீதியில் ஏழு படுக்கை அறைகள், இரண்டு சமையலறைகள், 3 குளியல் அறைகள், வாகனத் தரிப்பிட வசதி (பல வாகனங்கள்), நன்னீர் கொண்டுள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும். நிறுவனங்களுக்கு உகந்தது. தொடர்பு: 0212222880, 0713055845. (37344)

இணுவில் வைத்தியசாலைக்கு முன்பாகச் சகல வசதிகளும் கொண்ட 700 சதுர அடி மாடிக் கட்டடம் வாடகைக்குண்டு. காரியாலய உபயோகத்திற்கு உகந்தது. தொடர்பு: T.P.: 222 6029. (37784)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Original Prima Broiler குஞ்சுகள் விலை குறைக்கப்பட்டுள்ளது (விலை ரூபா 40). 18.07.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-42072)

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட (Original prima Broiler) குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 18.07.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக்கிளைகளிலும் சுட்டிபாம் - வட்டுக்கோட்டை. சந்நிதி பாம் - தொண்டைமானாறு. ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி. முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (37452)

### திருமண சேவை

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் உண்டு. உங்கள் பிள்ளைகளின் வளமான வாழ்வுக்கு ஏற்ற மணமக்களைத் தெரிவுசெய்ய இன்றே நாடுங்கள். தொடர்பு: த.சிவானந்தன் பிரபல ஜோதிடர் 264, பலாலி வீதி, கந்தர்மடம். (37766)

### தவறிவிட்டது

'கிறேஸ் இல்லம்' குருமன்காடு வவுனியா என்ற முகவரியை உடைய சந்திரலிங்கம் டிலக்ஷன் என்பவருடைய தே.அ.அ. (இல. 831611871V) மற்றும் பல்கலைக்கழக அ. அ. என்பன கடந்த 13.06.2005 (புதன்கிழமை) நல்லூருக்கும் வட்டுக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். நல்லி சில்க்ஸ், மின்சாரநிலைய வீதி , யாழ்ப்பாணம். T.P.222-5890, 077 3086784. (37780)

## பொதுக்கட்டமைப்பின் தலைமை புலிகளிடம் என்பதால் பெரும்பான்மையினர் பயங்கொள்ள வேண்டாம்

### நிதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 16

பொதுக்கட்டமைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தலைமைத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதைக் கண்டு பெரும்பான்மை இனத்தவர்கள் பீதியடைய வேண்டியதில்லை. நமது நாட்டில் தலைமை நாற்காலிக்கு ஏற்பட்டுள்ள போட்டிகள்தான் நாட்டையே சீரழித்து விட்டன எனச் சாடுகின்றார் நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம.

அரசும் புலிகளும் செய்துகொண்டுள்ள பொதுக்கட்டமைப்பின் பிராந்திய சபையில் புலிகள் தரப்பில் ஐந்து பேர் இருக்கின்றனர். அரச தரப்பில் இரண்டு பேர் மட்டுமே இருக்கின்றனர். அதன் தலைமைத்துவமும் புலிகளிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஏன் அரசு தலைமைப் பொறுப்பை ஏற்க முடியாது? - என பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். இக் கேள்விக்கு நிதி அமைச்சர் சற்றுக் காட்டமாகவே பதில் அளித்தார்.

நீங்கள் ஏன் எல்லாவற்றையும் சந்தேகத்துடன் நோக்கவேண்டும் நல்ல வழியில் சற்றுச் சிந்தித்தால் என்ன?

புலிகள் தரப்பில் ஐந்து பேர் இருந்தாலும் அவர்களால் தன்னிச்சையாக எதனையும் தீர்மானிக்க முடியாது. ஐந்து பேருடன் மேலும் இருவர் ஆதரவளித்தால் மட்டுமே அதனைத் தீர்மானிக்க முடியும்.

அதேவேளை, இந்தச் சபை ஆலோசனைகளையும், திட்டங்களையும் சிபார்சு செய்வதுடன் அவற்றை கண்காணிக்கும் அதிகாரங்களை மட்டுமே கொண்டவை.

ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதும், நிதியைக் கையாள்வதும் அந்தந்த மாவட்ட அரச அதிபர்கள் மற்றும் அரச அதிகாரிகள் வசமே இருக்கும். இவ்வகையில் மீள்கட்டமைப்புப் பணிகளுக்கு வழங்கப்படும் நிதியில் ஒரு செப்புக் காசுகூட புலிகளின் கைகளுக்குப் போகாது. இதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

இதைவிட்டு தலைமைத்துவம் தொடர்பாகப் பீதியடையக் கூடாது. இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கல்களுக்கு எல்லாம் தலைமை நாற்காலிக்கான போட்டிகள் தானே இதற்குக் காரணம்? என்றும் நிதி அமைச்சர் கூறினார். (க-3)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை16

ஆங்கிலக்கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் அமைக்கப்பட்ட ' வெளிச்சவீடு' பாடசாலைகளின் மாணவர்களது பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்குக் கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

' வெளிச்சவீடு' பாடசாலை பற்றிய தகவல்கள் மற்றும் ஆங்கில மொழிக் கல்வியை மேம்படுத்த வெளிச்சவீடு பாடசாலைகள் ஆற்றும் பணிகள் தொடர்பாக நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பெற்றோர் கலந்துகொள்வர். (ஓ-202)


**Study in India**

இந்தியாவின் பெங்களூர் பல்கலைக்கழகத்தில் இலங்கை மாணவர்களை அனுமதிப்பதற்காக விரிவுரையாளர்கள் இங்கு வந்துள்ளனர். A|L பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் 2005 ஆம் ஆண்டு A|L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும் உடன் சமுகமளிக்கவும்.

யுனிவெக் கணனிப் பயிற்சிக் கல்லூரி, இலங்கை வங்கி அருகில் சங்கானை
T.P: 077 6176476
(37758) (39-11-45-21)

**விற்பனைக்கு**

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுது பார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.
(சி-42048) **யாழ்-போன் சொப்** (38-11-45)
10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி, (திறீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக) யாழ்ப்பாணம்.

**வேலைக்கு ஆள் தேவை**

நல்ல அனுபவம் உள்ள Off Set Minder (Cord Machine Operator) தேவை. தகுதி உடையவர் உடனடியாக விண்ணப்பிக்கவும். ஊதியம் நேரில் தீர்மானிக்கப்படும்.
முகாமையாளர்
அமெரிக்கன் சிலோன் மிஷன் அச்சகம்
இல. 464, ஆஸ்பத்திரி வீதி,
(37775) யாழ்ப்பாணக் கல்லூரி
(Undergraudate Dept.)யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்**



இந்தியாவிலிருந்து வந்துள்ள
ஸ்ரீ பாலகங்காதர சாஸ்திரிகள்
கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது
**அறை எண் 01, ரி.கே.ரூறிஸ்ற் இன்,**
இல.200, பலாலி றோட், கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி), யாழ்ப்பாணம். T.P.: 021 2225680, 0776627373. (37779) (21-11-45)

**PHYSICS**

Mr.S.கபிலன்
06-Heat-sat., sun.-3 p.m.
07- Mechanics Thurs., Fri.- 5.30 p.m.
SHAMROCK
J/Eachchamoddai Rd.

**ORGAN / VIOLIN NOTES**

Organ, Guitar, வயலின், வீணை போன்ற இசைக் கருவிகளுக்கான இசைக்குறிப்புகள் பாகம் 40 வெளிவந்து விட்டது.
தொடர்பு: S.S.RAJEENDRAN,
Karaweena Isai Manram,
75, Temple Road, Nullur, Jaffna.
T.P 071 3055991
(37700) (21/11/45)

**கோப்பாயில்............**

தகவல் தொழில் நுட்பத்துறையில் புதிய உதயம்

**ACS**

(Active Computer System)

அனைத்து Diploma கற்கை நெறிகளிற்கும் 50% கட்டணச் சலுகை வழங்குவதில் பெருமையடைகின்றோம்.


| CERTIFICATE COURSES | கட்டணம் |
|---|---|
| MS - Word | 750 |
| Ms – Excel | 750 |
| Ms – Access | 1000 |
| Ms –Power Point | 750 |
| Adobe Pagemaker 7 | 1000 |
| Adobe Photo Shop 7 | 1000 |
| Coral DRAW 11 | 1200 |
| Flash MX | 1000 |
| Maya 5 | 1200 |
| Visual Basic 6.0 | 1200 |
| Pascal | 1200 |
| C++ | 1200 |

| DIPLOMA கற்கைநெறி | சலுகைக் கட்டணம் |
|---|---|
| Diploma in Ms Office | 1200 |
| Diploma in Computer Science | 2000 |
| Diploma in Desktop Publishing | 2500 |
| Diploma in Hardware Engineering | 2300 |
| Diploma in Auto CAD | 2000 |
| Diploma in Internet Technology | 2500 |
| Diploma in VB Programming | 2000 |
| Diploma in Multimedia | 2700 |
| Diploma in Webpage Designing | 2500 |


NEW BATCHES START ON

Batch I : 16/07/2005
Batch II : 19/07/2005
Batch III : 25/07/2005
Batch IV : 31/07/2005

பதிவுகளுக்கு:
கோப்பாய் சந்தி, கோப்பாய்.
(C/42069) (21-11-45)


## மரண அறிவித்தல்

### திருமதி இராஜேந்திரம் பாக்கியம்



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கலட்டி அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேந்திரம் பாக்கியம் 14-07-2005 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் இராஜேந்திரம் (வைரமுத்து மாமா) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கதிர்காமு - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னத்தங்கச்சி தம்பதியரின் மருமகளும் உமாதேவி, சத்தியாதேவி, கருணாதேவி, யசோதா, யசோதரன் (லண்டன்), இராஜேஸ்வரன் (ஜேர்மனி), ரேவதி (பிரான்ஸ்), கிரிதரன், கிரிஷாந்தி, பிரபா ஆகியோரின் பாசமிகு தாயாரும் விநாயகமூர்த்தி (இந்தியா), ஸ்ரீஸ்கந்தராசா, இரத்தினவேலு (ரதி பென்ஸி), ஜெகதீஸ்வரன், ஸ்ரீபாமினி (ஜேர்மனி), பாக்கியநாதன் (பிரான்ஸ்), சந்திரகுமார், படிகலிங்கம் ஆகியோரின் மாமியும் பிரதீபா, பிரசன்னா (பிரான்ஸ்), பிரசாத், பிரவீனா, ஷர்மிலி, ஷன்யா, கிஷோன்,நிஷோன், திவ்யா, அகிஜன், ரூபினி, செவிணா, பிரின்ஸ், டுலக்ஷி, சரண்யா, விஜித், வினித், லக்ஷாயினி, அச்சுதாயினி, அலெக்ஸன், அருஷ்ஷிகா, பிரணவன், மதுரிக்கா, அஸ்வினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16-07-2005) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பையன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

830, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 5036

தகவல்:
இராசேந்திரம்
[வைரமுத்துமாமா - கணவர்],
கிரிதரன் [கிரி - மகன்].

(37778) (24-11-45)

பொதுமக்கள் மருத்துவசேவையை முழுமையாகப்பெற

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையை தரமுயர்த்த அபிவிருத்திக் குழு தீவிர முயற்சி

கரவெட்டி,ஜூலை16

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையைப் பொது வைத்தியசாலையாகத் தரமுயர்த்த மேற்படி வைத்தியசாலையைத் அபிவிருத்திக்குழு தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர் தெரிவித்ததாவது:-

கடந்த வருடங்களில் பருத்தித்துறை வைத்தியசாலையின் தரம் உயர்த்தும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. எனினும், சம்பந்தப்பட்ட அமைச்சு யாழ். மாவட்டத்தில் யாழ். போதனா வைத்தியசாலை ஒன்று உள்ளது என்றும் -

அங்கு சகல வசதிகளும் உள்ளன எனவும் - தெரிவித்து தரமுயர்த்தும் கோரிக்கையைக் கவனத்தில் கொள்ளவில்லை.

ஆனாலும், தென்பகுதியில் பல ஆதார வைத்தியசாலைகள் தரமுயர்த்தப்பட்டன. இந்நிலையில், இங்கு ஏன் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையைத் தரமுயர்த்தக்கூடாது என்ற கேள்வியுடன் கோரிக்கை சுகாதார அமைச்சிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து அமைச்சுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வைத்தியசாலைக்கு வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிமேற்பார்வை உத்தியோகத்தர்கள், தாதிகள், சிற்றூழியர்கள், இரத்தப் பரிசோதகர்கள், சத்திர சிகிச்சை நிபுணர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள் எனப் பல்வேறு மட்டத்திலும் ஆளணிப்பற்றாக் குறை நிலவுகிறது.

தற்போது மருந்துகள், கட்டட வசதி, மருத்துவ உபகரணங்கள் போன்றவை உள்ளன. ஆனால், வைத்தியர்கள் இல்லாததால் இப்பகுதி நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்படும் நோயாளர்கள் பயணத்தின் போது மேலும் பாதிப்புக்குள்ளாக நேரிடுகிறது. இடைநடுவில் உயிரிழக்கின்றனர். இதனால் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையைத் தரமுயர்த்துவது அவசியம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

பருத்தித்துறை வைத்தியசாலையின் நிதி உதவிக்காக நேற்றுமுதல் எதிர்வரும் 21ஆம் திகதிவரை கொடி வாரம் அனுஷ்டிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஓ-70)

# கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு பேராளர் மாநாடும் பேரணியும்

அரியாலை,ஜூலை16

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 30 ஆம் திகதி கூட்டுறவுப் பேராளர் மாநாடு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டைத் தொடர்ந்து மறுநாள் கூட்டுறவாளர்களின் எழுச்சிப் பேரணியும் பொதுக்கூட்டமும் மருதனார்மடத்தில் இடம்பெறவுள்ளது.

கூட்டுறவுப் பேராளர் மாநாட்டில் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள், செயலக அதிகாரிகள் முன்னிலையில் கூட்டுறவு நிறுவனங்கள் தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்கள் மறுநாள் இடம்பெறும் கூட்டுறவாளர் பொதுக் கூட்டத்தில் பிரகடனப்படுத்தப்பட உள்ளன.

பேரணி மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க முன்றிலில் இருந்து ஆரம்பமாகி மருதனார் மடத்தைச் சென்றடைந்து அங்கு பொதுக் கூட்டம் நடைபெறும். (ஓ-17)



யாழ்.றோட்டறிக் கழகத்தின் புதிய தலைவர் பதவியேற்பு நிகழ்வு அண்மையில் உதயன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் முன்னாள் தலைவர் றோட்டேரியன் ஈ.சரவணபவன் றோட்டேரியன் என்.சரவணபவனுக்கு தலைமைப் பதவியை வழங்குவதை முதலாவது படத்திலும் -

புதிய தலைவர் றோட்டேரியன் என்.சரவணபவன், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் மாவட்ட ஆளுநர் டாக்டர் வி.விஜயகுமார், கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொண்ட உதவி மாவட்ட ஆளுநர் டொமின்கோ ஜோர்ஜ், மேல்நீதிமன்ற [illegible] கே.பி.எஸ்.வரதராஜா ஆகியோரை இரண்டாவது படத்திலும் காணலாம். (அ-203)

# வலி.தெற்கு அபிவிருத்திக்கு நிதி

வலி.தெற்கு,ஜூலை16

கிராம எழுச்சித்திட்டத்தின் கீழ் வலி.தெற்குப் பிரதேச செயலக சமுர்த்தியணிகளுக்கூடான பிரதேச அபிவிருத்தி வேலைகளுக்கென இவ்வருடம் மூன்று லட்சம் ரூபா நிதி கிடைத்திருப்பதாக வலி.தெற்குப் பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர் ந.காசிவேந்தன் தெரிவித்துள்ளார்.

இந்நிதி, இப்பிரதேச செயலகத்துக்குட்பட்ட 15 கிராம சேவையாளர் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் 20 ஆயிரம் ரூபா வீதம் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் -

இந்நிதியினைக் கொண்டு கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள சிறிய வீதிகள், பாலங்கள், கிணறுகள் என்பவை திருத்தியமைக்கப்பட்டுப் புனரமைப்புச் செய்யப்படும் எனவும் - சமுர்த்தி முகாமையாளர் கூறியுள்ளார். (ஓ-152)

## மரணச்சடங்குக்குச் சென்றவர் வீட்டில் கதவுடைத்துத் திருட்டு!

வலி.தெற்கு,ஜூலை16

பட்டப்பகலில் வீட்டின் கதவை உடைத்துப் பெறுமதிமிக்க பொருள்கள் களவாடப்பட்ட சம்பவம் கடந்த புதன்கிழமை கந்தரோடையில் இடம்பெற்றது.

மரணச் சடங்கு ஒன்றில் கலந்து கொள்வதற்காக வீட்டிலிருந்தோர் வெளியே சென்றிருந்தபோதே இத்திருட்டு நடந்துள்ளது.

இத்திருட்டுத் தொடர்பாகச் சுன்னாகம் பொலீஸார் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர்.(ஓ-152)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# வறுமைக் கோட்டின் கீழ் உள்ள விவசாயிகளுக்கு மரக்கறி விதைகள்

வலி.தெற்கு,ஜூலை16


உடுவில் மற்றும் தொல்புரம், சண்டிலிப்பாய் போன்ற இடங்களில் அமைந்துள்ள கமநல சேவை நிலையங்களூடாக அப்பகுதி விவசாயிகளுக்குத் தேவையான மரக்கறி விதைகளை இலவசமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அவ்வப்பகுதி விவசாய சம்மேளனங்களினூடாகவே இவை வழங்கப்பட உள்ளன.

தக்காளி, பாவல், கத்தரி, புடோல், பயற்றை போன்ற மரக்கறி விதைகள் வழங்கப்படுமெனவும் -

இவை வறுமைக்கோட்டின் கீழ் வாழும் விவசாயிகளுக்கே வழங்கப்படும் எனவும் - தெரிவிக்கப்பட்டது.

இவற்றை வழங்கவென காற்பரப்பு விவசாய நிலத்தைக்கொண்ட வறுமைக்கோட்டுக்குட்பட்ட விவசாயிகள் விவசாய சம்மேளனங்களூடாகவும், விவசாயப் போதனாசிரியர்களூடாகவும் தெரிவுசெய்யப்படவுள்ளனர். (ஓ-152)



முற்றவெளியில் அமைந்திருக்கும் யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கென இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் நவீன வசதிகளைக் கொண்ட புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய கட்டடத்தின் தோற்றத்தையும் எரிபொருள் நிலையத்திற்கென கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்ட புதிய தாங்கி ஒன்றையும் படத்தில் காணலாம். (படம்: அரியாலைச் செய்தியாளர்)

# பருத்தித்துறை நகரசபைக்கென கட்டடம் அமைக்க அனுமதிக்குக!

## உள்ளூராட்சி ஆணையரிடம் கோரிக்கை

கொக்குவில்,ஜூலை16

பருத்தித்துறை நகரசபைக்கென புதிய கட்டடமொன்றை அமைப்பதற்கு அனுமதி வழங்குமாறு பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் இதுதொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பருத்தித்துறை நகரசபை அலுவலகம் தற்போது தும்பளை வீதியிலுள்ள தனியார் கட்டடமொன்றில் இயங்கிவருகிறது. இங்கிருந்து அலுவலகத்தை வேறிடத்துக்கு மாற்றவேண்டிய நிர்ப்பந்தமும் நெருக்குதலும் ஏற்பட்டுள்ளது. இதனால் தும்பளை, மணியகாரன் சந்தியிலுள்ள தனியார் கட்டடத்துக்கு அலுவலகத்தை மாற்ற வேண்டியுள்ளது.

இந்நிலையில் நகரசபைக்குரிய காணி உயர்பாதுகாப்பு வலயத்தில் இருப்பதாலும் கடல் எல்லையிலிருந்து 200 மீற்றருக்குள் இருப்பதாலும் அக்காணியில் நகரசபை அலுவலகக் கட்டடத்தை நிர்மாணிக்க முடியாமல் உள்ளது.

அலுவலகக் கட்டடம் அமைப்பதற்குச் சபைக்குச் சொந்தமான- பொருத்தமான காணி இல்லாததால் 3ஆம் குறுக்குத் தெருவிலுள்ள சபைத் தொழிலாளர்களுக்கு வீடமைப்பதற்கென அரச அதிபரால் பராதீனப்படுத்தப்பட்ட அரச காணியில் கட்டடம் அமைப்பதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இக்காணியில் நகரசபைக்கென கட்டடம் அமைப்பதற்கு தாங்கள் அனுமதி அளித்தால் கட்டுமானத்துக்குத் தேவையான உத்தேச மதிப்பீட்டு நிதியை வழங்குவார் என்று அரச அதிபர் கூறியுள்ளார்.

ஆகவே, இதற்கான அங்கீகாரத்தை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்- என்றுள்ளது. (ஓ-76)

## தொழிலாளர்கள் போராட்டம்

யாழ்.போதானா வைத்தியசாலையில் சுத்திகரிப்புச் சேவையில் ஈடுபடும் தனியார் ஊழியர்கள் நேற்று முன்தினம் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். சம்பள அதிகரிப்புக் கோரியே இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுகாதார அமைச்சின் அனுமதியுடன் வருடாவருடம் ஒப்பந்த அடிப்படையில் சுத்திகரிப்புப் பணி தனியாரிடம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஓ-139)

## மீன் முள்ளால் பாதிப்பு!

தென்மராட்சி,ஜூலை16

மீன் கறிசாப்பிட்டபோது தொண்டைக்குள் முள் சிக்கியதால் அவதியுற்ற பெண் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

சரசாலை வடக்கைச் சேர்ந்த 55 வயதுடைய பெண்மணி ஒருவரே கடந்த திங்கட்கிழமை மீன் முள்ளால் பாதிப்புற்றவராவார்.

இவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.(ஓ-117)

# தென்மராட்சியில் விசர்நாய்க்கடிக்கு ஒரே நாளில் எட்டுப்பேர் இலக்கு!

## அதிகரிக்கும் வெப்பத்தால் தொடரும் தொல்லை

தென்மராட்சி,ஜூலை16

விசர்நாய்களினால் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கடியுண்ட எட்டுப்பேர் ஒரே நாளில் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர்.

அல்லாரை தெற்கைச் சேர்ந்த இராசரத்தினம் பூமலர் (வயது 50) இவரது மகளான இராசரத்தினம் ரசிந்தா (வயது 16), பாலகிருஷ்ணன் கஸ்தூரி (வயது 9) இவரது சகோதரியான பாலகிஷ்ணன் கல்பனா (வயது 9) -

மிருசுவில், விடத்தற்பளையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை செங்கமலம் (வயது 77) இவரது மகனான கணபதிப்பிள்ளை சிவப்பிரகாசம் (வயது 50), அரசரத்தினம் கமலாம்பிகை (வயது57) -

சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த சுதந்திரன் தேனிலா (ஒன்றரை வயது) ஆகியோரே விசர்நாய்களினால் கடியுண்டவர்களாவர்.

இதேவேளை -

இந்த மாதத்தின் முதல் பதினொரு தினங்களில் 34 பேர் விசர்நாய்களினால் கடியுண்டநிலையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்றும் - சாவகச்சேரி மருத்துவமனைப் புள்ளி விவரங்கள் மூலம் தெரியவருகிறது.

கடந்த முதலாம் மற்றும் ஏழாம் திகதிகளில் தலா ஆறுபேரும் இரண்டாம் திகதி ஐந்து பேரும் மூன்றாம் நான்காம் திகதிகளில் தலா மூவரும் விசர்நாய்களினால் கடியுண்டவர்களில் அடங்குவர்.

அண்மைக் காலமாக நிலவிய வெப்பக் காலநிலையே நாய்களுக்கு விசர்நோய் ஏற்பட முக்கிய காரணம் என்று வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ச.அம்பிகைபாகன் தெரிவித்தார். (ஓ-117)

## பங்குத்தந்தையர் நியமனம்

வலி.தென்மேற்கு,ஜூலை16

பண்டத்தரிப்பின் புதிய பங்குத் தந்தையாக பாஷையூர் பங்குத் தந்தையாகக் கடமையாற்றிய அருட்திரு. ம.ஜேசுரெட்ணம் அடிகளார் யாழ். ஆயரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த நான்கு வருடகாலமாக பண்டத்தரிப்புப் பங்குத் தந்தையாக பணிபுரிந்துவந்த அருட்திரு. ம.பெ. ஞானரத்தினம் அடிகளார் குருத்துவத்துறையில் உயர்பயிற்சி பெறுவதற்காக வெளிநாடு சென்றுள்ளார். (ஓ-135)

* * *

வலி.தென்மேற்கு,ஜூலை16

சில்லாலை பங்குத் தந்தையாக கடந்த மூன்று வருடகாலமாகப் பணியாற்றிய அருட்திரு. அ.ப. அன்ரனிப்பிள்ளை அடிகளார் இம்மாதம் முதல் மானிப்பாய் பங்குத் தந்தையாக நியமனம் பெற்றுள்ளார். (ஓ-135)

# GIT கருத்தரங்கு

A/L 2006 மாணவர்களே

நல்லூர் லயன்ஸ் கழக ஆதரவில் IBMS நடாத்தும்

இலவச கருத்தரங்கு

இடம் : யாழ். இந்துக்கல்லூரி மண்டபம்
காலம் : 30.07.2005 சனிக்கிழமை
09.00 மணி முதல் 05.00 மணி வரை

A/L 2006 மாணவர்களுக்கான GIT பரீட்சை நடைபெறவுள்ளது யாவரும் அறிந்ததே. இருப்பினும் மாணவர்கள் எவ்வளவு தூரம் பரீட்சைக்குத் தயாராக உள்ளார்கள் என்பது கேள்விக்குறியாகவுள்ளது. இந்நிலையில் யாழ். நகரில் முன்னணி வகித்துவரும் கணனி நிறுவனம் என்றவகையில் நாம் நல்லூர் லயன்ஸ் கழக ஆதரவில் முற்றிலும் இலவசமாக இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்துள்ளோம். எதிர்காலத்தில் GIT சான்றிதழ் இன்றி தொழில்வாய்ப்போ அல்லது உயர்கல்வியோ பெற்றுக்கொள்வது கடினம் என்பது யாவரும் உணர்ந்ததே.

A/L மாணவர்கள் அனைவரையும் பங்குபற்றிப் பயனடையுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

மேலதிக விபரங்களுக்கு :

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES (IBMS)
# 410, K.K.S. ROAD, JAFFNA. T.P NO : 021 222 8232

ஊடக அனுசரணை: உதயன்


# தென்மராட்சி கல்வி வலய அறநெறிப் போட்டிகள்

தென்மராட்சி, ஜூலை16

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பக் கல்விப் பிரிவு மாணவர்களுக்கான அறநெறிப் போட்டிகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

தரம் 2 முதல் 5 வரையான மாணவர்களுக்கான எழுத்துப் பரீட்சைகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கும் -

தரம் ஒன்று முதல் 5 வரையான வகுப்பு மாணவர்களுக்கான மனனம் ஒப்புவித்தல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் -

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

தரம்-1 மாணவர்களுக்கு ஆத்திசூடி, தரம் - 2 மாணவர்களுக்கு கொன்றை வேந்தன், தரம் - 3 மாணவர்களுக்கு வாக்குண்டாம், தரம் - 4 மாணவர்களுக்கு நன்னெறி, தரம் -5 மாணவர்களுக்கு நல்வழி ஆகியவற்றில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

எழுத்துப் போட்டிகளில் தேர்ச்சி பெறும் 100 மாணவர்களுக்கும் மனனம் ஒப்புவித்தல் போட்டியில் தேர்ச்சி பெறும் 400 மாணவர்களுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் கலந்துகொள்வார். (எ-31-117)

## ஆயுள்வேத மருந்து வகைகள் கிடைத்தன

வடமராட்சிஜூலை16

பருத்தித்துறைப் பிரதேச சபையின் புலோலி இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலைக்கு இவ்வருடத்துக்கான ஒரு தொகுதி மருந்து வகைகள் வந்துசேர்ந்துள்ளன.

இலங்கை ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் இம் மருந்துவகைகளை நன்கொடை நிதியிலிருந்து அனுப்பி வைத்துள்ளது.

(எ-173)


## மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளராகப் பணியாற்றிப் பதவியுயர்வுடன் இடமாற்றம் பெற்றுச்சென்றவரான

திருமிகு.

**பாலசிங்கம் செந்தில்நந்தனன்**

அவர்கள் தனது சேவையில் மேன்மேலும் சிறப்புற மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தன்னலம் கருதாத சேவையாளன்
தருணமதில் கைகொடுக்கும்
தயாளசீலன்
தந்தைபோல் வழிகாட்டும்
தகுதியாளன்
தரணியென்றும் உனைப்போற்றும்
வாழி! வாழி!!

பிரதேச செயலாளரும்
உத்தியோகத்தர்களும்.

நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.

(37698) (26-15-45-24)



## நிதி முகாமைத்துவம் மற்றும் பங்குச் சந்தை தொடர்பான விசேட செயலமர்வு

காலம்:- 16-07-2005 சனிக்கிழமை
பிற்பகல் 3 - 6 மணிவரை
இடம்:- யூரோவில் கேட்போர்கூடம்,
17, கமத்தொழில் சேவை நிலைய வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

♠ நிதி முகாமைத்துவம் மற்றும் மூலதனச் சந்தை
திரு.S.ஜெயவர்மன் F.C.A., F.S.C.M.A. (பட்டயக் கணக்காளர்)
பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்.
NATIONAL ASSET MANAGEMENT LTD (NAMAL)
(SUBSIDIARY OF DFCC BANK)

♠ மத்திய வைப்புத் திட்டத்தில் கணக்கு ஆரம்பிப்பது எப்படி? (CDS ACCOUNT)
பங்குச் சான்றிதழ்களை மத்திய வைப்புத்திட்டத்தில் வைப்பில் இடுவது எப்படி?
திரு.V.நிரஞ்சன்
ஆலோசகர்
BARTLEET MALLORY STOCKBROKERS(PVT) LTD.

♠ Dialog Telekom பங்குகள் - ஓர் சிறந்த முதலீடு?
கலந்துரையாடல்

மேலதிக விவரங்களுக்கு: -
0212222849/0212227012
0773.043206/0773-130061

ORGANIZED BY
Bartleet Mallory Stock Brokers (Pvt.)Ltd.
National Asset Management Ltd.

(c/42054)(46-15&45&24)



உலக தரத்திற்கு நிகராக

ஜேர்மன் நாட்டு தொழில் நுட்ப இயந்திரம்மூலம்

1 லீற்றர் 2.00

சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்

புற ஊதா கதிர்மூலம் கிருமிகள் அழிக்கப்பட்டது

எப்போதும் கிளிநொச்சியில் பெற்றுக்கொள்ளலாம்

இயக்கச்சி சந்தியில் உள்ள எமது குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலும் பெற்றுக்கொள்ளலாம்

தொடர்புகளுக்கு:-
குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்
இயக்கச்சிச் சந்தி
இயக்கச்சி.

MWB Construction
NGO complex
(TRO Head Office)
Jaffna Road,
Kilinochchi.

நீர்தாங்கிமூலம் உங்கள் இடங்களுக்கு நேரில் கொண்டுவந்து தரப்படும்


## 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 02 - 04 - 1946

மறைவு 16 - 06 - 2005

திருமதி

**பாலசிங்கம் மகேஸ்வரி** (பரமேஸ்வரி)

அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (16-07-2005) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து இவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.77, மருதடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (37726)(46-15-45-24) - பிள்ளைகள்.

### பெயரையும் மானத்தையும் காப்பாற்றிக் கொள்வதானால்

# நிவாரணமாகக் கிடைத்த நிதியைத் தனியார் கணக்கில் பிரதமர் வைப்பிலிட்ட காரணத்தை விளக்கவேண்டும்

### அரசும் விசாரணை நடத்தவேண்டும் என்கிறார் திஸ்ஸ அத்தநாயக்க

கொழும்பு,ஜூலை16

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது பெயரையும், மானத்தையும் காப்பாற்ற வேண்டுமென்றால், ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண நிதியாக இலங்கைக்குக் கிடைத்த கோடிக்கணக்கான ரூபா நிதியை தனிப்பட்ட ஒருவரின் வங்கிக் கணக்கில் நிலையான வைப்பில் இட்டமைக்கான சரியான காரணத்தை மக்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும். அரசும் இது தொடர்பாக விசாரணைகளை நடத்தவேண்டும்.

- இவ்வாறு கூறினார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதிப் பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க. கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில் தெரிவித்ததாவது:-

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்றும் தற்காலிகக் கூடாரங்களில் வாழ்கிறார்கள். உரிய நிவாரணப் பொருள்களின்றி கஷ்டத்தின் மத்தியில் அவர்கள் தவிக்கிறார்கள்.

இந்தநிலையில், ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண நிதியாக சர்வதேச நாடுகளில் இருந்து கிடைத்த 8 கோடி 30 இலட்சம் ரூபாவைப் பிரதமர் ஸ்டான்டட் சார்ட்டட் வங்கியில் அவரது உறவினர் பெயரில் நிலையான வைப்பில் இட்டுள்ளார்.

இந்த நாட்டில் உள்ள நிதிச்சட்டத்தின்படி, அரச நிதியைத் தனியார் வங்கிக் கணக்கில் வைப்பிலிட முடியாது.

ஆனால், இந்த நிதியை இவ்வாறு வைப்பிலிட இவ்வருடம் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி அமைச்சரவை அனுமதி வழங்கியதாக பிரதமர் கூறுகின்றார். அமைச்சரவை அப்படி வழங்கினால், அது சட்டவிரோதமானதாகும். அவ்வாறு அமைச்சரவை அனுமதி வழங்கியதற்கான ஆதாரத்தைக் காட்டவும் பிரதமர் தயங்குகிறார்.

பெப்ரவரி 2ஆம் திகதி இதற்கான அமைச்சரவை அனுமதி பெறப்பட்டதாகப் பிரதமர் கூறுகின்றார். ஆனால், ஜனவரி 31ஆம் திகதியே இந்த வங்கிக் கணக்குத் திறக்கப்பட்டுவிட்டது. அமைச்சரவை அனுமதி பெறப்படுவதற்கு இரண்டு நாள்களுக்கு முன்பே வங்கிக் கணக்குத் திறக்கப்பட்டிருப்பது பிரதமரின் பொய்யை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண நிதியாக வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் பணம் பிரதமர் நிதியம், ஜனாதிபதி நிதியம் மற்றும் திறைசேரி போன்றவற்றிற்கே செல்லவேண்டும் எனவும், திறைசேரி செயலாளரின் நிர்வாகத்தின் கீழேதான் பணம் செலவிடப்படவேண்டும் எனவும் கடந்த வருடம் டிசெம்பர் 29ஆம் திகதி அமைச்சரவை தீர்மானித்தது.

ஆனால், இப்போது இந்தப் பணம் திறைசேரிச் செயலாளரின் கையொப்பம் இன்றியே தனிப்பட்டவரின் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

அவ்வாறு வைப்பிலிடப்பட்டிருக்கும் பணத்தில் ஒரு சதத்தையேனும் தாம் செலவிடவில்லை என்று பிரதமரின் செயலாளர் கூறுகின்றார்.

இவ்வாறு வைப்பிலிட்டிருப்பதே முதல் குற்றம். வைப்பிலிடப்பட்ட பணத்தை மக்களுக்குச் செலவழிக்காமல் வைத்திருப்பது இரண்டாவது குற்றம்.

பணம் அரச அதிகாரியின் பெயரில் இல்லாமல் தனிப்பட்டவரின் பெயரில் வைப்பிலிட்டிருப்பதால் கணக்காய்வாளர் நாயகத்தாலும் இப்பணத்தொகையைச் சோதிக்கமுடியாது.

ஆகவே, அரசு இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும். அதே வேளை, பிரதமர் இதற்கான காரணத்தை மக்களுக்கு விளக்கிக்கூறவேண்டும் - என்றார். (க-3)

## வினாவிடைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான கணித வினாவிடைப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

தரம் 6முதல் 11 வரையான மாணவர்களுக்கிடையில் நடைபெறவுள்ள இப்போட்டி யாழ். கோட்டப் பாடசாலைகளிற்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும் நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் நடைபெறும் என்று பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள் ளார். (எ-202)

## சிப்பாய் காயம்

தென்மராட்சி,ஜூலை16

பயிற்சியின் போது தவறுதலாகத் துப்பாக்கி வெடித்ததில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

கடந்த வியாழக்கிழமை கிளாலியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்த சிப்பாய் கொழும்பு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். சமன் குமார என்பவரே காயமடைந்தவராவார். (ஐ-117)

## இருமாடிக்கட்டடத்துக்கு அடிக்கல் நடப்பட்டது

அரியாலை,ஜூலை16

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இருமாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது.

சுமார் 40 லட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

மேற்படி கட்டட அடிக்கல் நடும் வைபவத்தில் யாழ்.மாவட்ட கூட்டுறவுப் பொறுப்பாளர் பொ.புஸ்பகுமார் தமிழீழ நிர்வாக சேவையின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் சி.விஜிதரன் உட்பட கூட்டுறவு திணைக்கள அதிகாரிகள் மற்றும் கூட்டுறவாளர்கள் கலந்து கொண்டனர். (எ-17)

# கொஞ்சம் தேடினால் அம்மாவும் அகப்படுவார்

### ராஜித எம்.பி.கூறுகிறார்

கொழும்பு,ஜூலை16

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண நிதியாக இலங்கைக்கு கிடைத்த கோடிக்கணக்கான ரூபாவை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 'ஹெல்பிங்' அம்பாந்தோட்டை என்ற பெயரில் தனியார் வங்கி ஒன்றில் நிலையான வைப்பில் இட்டிருப்பது போலவே ஜனாதிபதியும் பலகோடி ரூபாவை இவ்வாறு வைப்பில் இட்டிருப்பார். கொஞ்சம் தேடிப்பார்த்தால் அம்மா நிச்சயம் அகப்படுவார். ஊடகவியலாளர்கள் இத்தேடுதல் வேட்டையை நடத்த வேண்டும். அவர்களால் இதனை இலகுவாகச் செய்யமுடியும்.

- இவ்வாறு கூறினார் ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன.

ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

சர்வதேச நாடுகள் இலங்கைக்கு ஆழிப்பேரலை அனர்த்த நிதியாக வழங்கிய பணத்திலிருந்து 8 கோடியே 30 லட்சம் ரூபாவை பிரதமர் 'ஸ்டான்டட் சார்ட்டட்' தனியார் வங்கியில் வேறொருவரின் நிலையான வைப்புக் கணக்கில் இட்டிருக்கின்றார் என்பது தெரிந்ததே. இதேபோல் ஜனாதிபதியும் செய்திருக்கக் கூடும்.

பிரதமரைவிடவும் ஜனாதிபதி பயங்கரக் கில்லாடி. அவர் பலகோடி ரூபா பணத்தை நிச்சயம் எங்கேயாவது பதுக்கி வைத்திருப்பார்.

ஜனாதிபதிக்குத் தேசிய மட்டத்தில் மாத்திரமன்றி சர்வதேச மட்டத்திலும் பல நண்பர்கள் உள்ளனர். அத்தனைபேரும் ஜனாதிபதியைப் போல் கில்லாடிகள். அவர்களின் ஊடாக ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண நிதியாகக் கிடைத்த பலகோடி ரூபாவை நிச்சயம் பதுக்கி வைத்திருப்பார். சற்று முயற்சிசெய்து தேடிப்பார்த்தால் கண்டுபிடித்து விடலாம். ஊடகவியலாளர்கள் இந்த நல்ல காரியத்தை மக்களின் நலன் கருதிச் செய்ய வேண்டும் - என்று அவர் மேலும் கூறினார். (க-3)

# அமைச்சரவைத் தீர்மானங்கள்

கடந்த புதன்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

*** வடக்கு - கிழக்கு மாகாணப் பாதை அபிவிருத்தி**

பிரதமரும், பெருந்தெருக்கள் அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவின் சிபார்சுகளின்படி வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 300 கிலோமீற்றர் நீளப் பாதைகள் அபிவிருத்தி செய்யப்படுதல். அதேவேளை பல பாலங்களையும் சீரமைத்தல்

*** சதொச ஊழியர்கள் சம்பள உயர்வு**

வர்த்தக, நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் கோரிக்கையை ஏற்று ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குதல்.

*** கிலிசீரியா உற்பத்தி**

பெருந்தோட்டத்துறையில் மேலதிக வருமானத்தைப் பெறும் வகையில் கிலிசீரியா மரங்களை மாற்றுப் பயிர்ச் செய்கையாக அறிமுகப்படுத்தப்படுதல். அமைச்சர் பிரியதர்ஷன் யாப்பாவின் சிபாரிசு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

*** அரசியல் பழிவாங்கல்**

முன்னைய அரசின் காலத்தில் அரசியல் பழிவாங்கல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுதல், இதனைப் பரிசீலனை செய்த மஹிந்த அமரவீர தலைமையிலான குழுவின் அறிக்கை அமைச்சரவையில் அங்கீகரித்தல்.

*** தேசிய கல்வியியல் கல்லூரி திருத்தச்சட்டம்**

ஆசிரியர் சேவையின் தரத்தை மேலும் சீரமைக்கும் வகையில் தேசியக் கல்வியியல் கல்லூரிச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருதல்.

ஜனாதிபதியின் சிபாரிசின்படி தற்பொழுது நடைமுறையில் இருக்கும் 32/1997 சட்டம் ரத்துச் செய்யப்பட்டு புதிய திருத்தச் சட்டத்தைக் கொண்டுவருதல்.

*** பல்கலைக்கழகங்களுக்கு மேலதிக கட்டடம்**

பல்கலைக்கழக மாணவர்களின் நலன் கருதி கேட்போர் கூடம் மற்றும் விரிவுரைகளை நடத்துவதற்காக மேலதிகமான கட்டடங்கள் அமைத்தல். இதற்கு இரண்டு கோடி ரூபா செலவிடுதல்.

*** இரசாயன பகுப்பாய்வு திணைக்கள விஸ்தரிப்பு**

நீதி மன்றங்களின் முன் தேங்கிக்கிடக்கும் பல ஆயிரக்கணக்கான வழக்குகளின் விசாரணைகளைத் துரிதப்படுத்தும் வகையில் கொழும்பு, மாத்தளை, பதுளை, அநுராதபுரம் ஆகிய நகரங்களில் நவீன வசதிகளுடன் கூடிய இரசாயன பகுப்பாய்வுக் கூடங்கள் அமைத்தல்.

*** கிராமிய பாடசாலைகளுக்கு மின்சாரம்**

மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள கிராமப்புற பாடசாலைகளுக்கும், வைத்தியசாலைகளுக்கும் சூரியசக்தி மூலம் (சோலர்பவர்) மின்சாரம் வழங்கும் புதிய திட்டத்தை அடுத்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தல்.

*** ரயில் போக்குவரத்துச் சேவை விஸ்தரிப்பு**

ரயில் போக்குவரத்துச் சேவையை விஸ்தரிக்கும் வகையில் மேலதிகமாக நூறு ரயில் பெட்டிகளையும், 50 டீசல் ரயில் இயந்திரங்களையும் கொள்வனவு செய்தல்.

*** இடம்மாற்றம் பெற்றுச் செல்லும் அரச ஊழியர்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதி**

இடம்மாற்றம் பெற்றுச் செல்லும் அரச ஊழியர்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதி கருதி கொழும்பு, காலி, கண்டி ஆகிய நகரங்களில் உள்ள ஏழு தேசிய பாடசாலைகளில் அனுமதி வழங்கப்படும். அதற்கமைய இப்பாடசாலைகளில் மேலதிக வகுப்பறைகள் அமைக்கப்படும். இத்திட்டம் 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்கு வரும்.

அமைச்சரவையின் இந்த தீர்மானங்களை அமைச்சரவைப் பேச்சாளரான நிமல் சிறிபால டி சில்வா செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (க-3)

# ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடமே என்பது மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு விழுந்த அடி!

கொழும்பு,ஜூலை16

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடமே இடம்பெறும் என சுதந்திரக் கட்சி தெரிவித்திருப்பது மக்களின் இறைமைக்கும், அவர்களின் அடிப்படை உரிமைகளுக்கும் விழுந்த பலத்த அடி.

- இவ்வாறு காரசாரமாகத் தெரிவித்துள்ளது ஐ.தே.கட்சி.

சுதந்திரக் கட்சி வெளியிட்ட செய்திக் குறிப்பில் ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடமே இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அது குறித்தே ஐ.தே.கட்சியின் பதில் அறிக்கை நேற்றுமுன்தினம் விடுக்கப்பட்டது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

இலங்கைக் குடியரசின் இறைமை மக்களுக்குரியதாகவும் இன்னொருவருக்கு வழங்கமுடியாததாகவும் இருக்கும் என நாட்டின் அரசமைப்பு உறுப்புரை மூன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கொள்கையைப் பின்பற்றுவதில் பற்றுறுதியோடு உள்ளது ஐக்கிய தேசியக் கட்சி.

மக்களின் சட்டமாக்கத் தத்துவம், மக்களின் நிறைவேற்று அதிகாரம், மக்களின் நீதித்துறை அதிகாரம் என்பன மக்களின் இறைமையின் சகல கோணங்களுக்குமாகும்.

இவை முறையே நாடாளுமன்றத்தாலும், ஜனாதிபதியாலும் நீதிமன்றங்களாலும் மக்கள் சார்பாக நடைமுறைப்படுத்தப்படுபவை.

இந்த ஏற்பாடுகள் பிரதானமே மக்களின் இறைமையின் இருப்பிடத்திற்குரிய அடையாளமாகும்.

இறைமை பல்கோணங்களைக் கொண்ட கோட்பாடு அது. அரசமைப்பு உறுப்புரை 03 இற்கு ஏற்ப - அரசின் அதிகாரங்கள் அடிப்படை உரிமைகள் வாக்களிக்கும் உரிமை என்பனவற்றை உள்ளடக்குகின்றது.

இறைமையின் மிகவும் முக்கிய மூலம் வாக்களிக்கும் உரிமையாகும். இதனைக் கைமாற்ற முடியாது. சட்டத்தால் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளவாறு உரிய கால இடைவெளிக்குள் தேர்தல்களில் மக்கள் பங்குகொள்ளும் உரிமையே இதுவாகும்.

அரசமைப்பின் உறுப்புரை 30 (2) இல் குடியரசின் ஜனாதிபதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆறு வருடங்களுக்கு இவர் பதவியில் இருப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆறு வருடத்திலும் ஜனாதிபதித் தேர்தலில் பங்குகொள்வது இலங்கை மக்களின் அடிப்படை உரிமை.

- இவ்வாறு ஐ.தே.கட்சி சட்டம் குறித்து தெளிவுபடுத்தியுள்ளது. (க-3)

# முன்னாள் ஜே.வி.பி. அமைச்சர்களின் திட்டங்களுக்கு அமைச்சரவை அனுமதி

### அவர்கள் பதவியில் இல்லாதபோது அரசு தாராளம்

கொழும்பு,ஜூலை16

ஜே.வி.பியினர் அரசில் இல்லாதபோதும் ஜே.வி.பியின் முன்னாள் அமைச்சர்கள் இருவர் முன்வைத்திருந்த இரண்டு அமைச்சரவைப் பத்திரங்களுக்கு அமைச்சரவை அனுமதி அளித்திருக்கிறது.

ஜனாதிபதி தலைமையில் கூடிய அமைச்சரவையில் இந்த அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

ஜே.வி.பி.அமைச்சர்களாகக் கடமையாற்றிய சந்திரசேன விஜேயசிங்க, கே.டி.லால்காந்த ஆகியோர் முன்வைத்திருந்த பத்திரங்களுக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியிருக்கிறது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீன்பிடிப் படகுகளை வழங்கும் திட்டம் தொடர்பில் சந்திரசேன விஜேசிங்கவும், கிராமிய சிறுகைத்தொழில்களுக்கு உதவிகளை வழங்கும் திட்டம் தொடர்பில் கே.டி.லால்காந்தவும் சமர்ப்பித்திருந்த பத்திரங்களுக்கே அமைச்சரவை அங்கீகாரத்தை வழங்கியது. (க-3)



# மானிப்பாயில் புதுப்பொலிவுடன்...

உங்கள் * மோட்டார் சைக்கிள் * துவிச்சக்கர வண்டி
* வாட்டர்பம் * ஆட்டோ உதிரிப்பாகங்களை

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

பிரதான வீதி, மானிப்பாயில்



## ஐங்கரன் மோட்டோர்ஸ்

எனும் ஸ்தாபனத்தை

இன்று (16.07.2005) சனிக்கிழமை மாலை 3.30 மணியளவில் உள்ள சுபமுகூர்த்த வேளையில் ஆரம்பிக்கவுள்ளோம் என்பதை எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் மகிழ்வுடன் அறியத் தருவதுடன் அத்தருணம் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.



பிரதான வீதி, மானிப்பாய்.
(சந்தை முன்பாக)

T.P: 021 222 5412
021 4591568

உரிமையாளரும்
ஊழியர்களும்.


## வாழ்த்துகின்றோம்

மணிவிழாக் காணும் எம் அன்புக்குரிய அன்னை



**திருமதி
சத்தியலஷ்சுமி
காங்கேயன்**

(B.A.(CEY) Dip.in.Ed.S.L.P.S.-I)
(முன்னாள் கல்விப் பணிப்பாளர்,
நல்லூர் கோட்டம்)

*நன்நல நகராம் நல்லூர்
கோட்டப் பணிமனையின்
தன்நலம் கருதா செயல்திறநாயகி
என்றும் தன் பொதுப்பணி தொடர்ந்து
சீர்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்தும்*

**அதிபர், ஆசிரியர்கள்.**
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.

(37757)(42.14.19)

## கேள்வி விண்ணப்பம் கோரல்

TRRO LTD

*அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்*

எமது யாழ்ப்பாண ஆழிப்பேரலை புனர்வாழ்வுத் திட்ட வாழ்வாதாரத் திட்டத்திற்குக் கட்டுமரம், வலைகள் கீழ்க்காணும் விவரங்கள் அடிப்படையில் தேவைப்படுகின்றன.

| இல. | வகை | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | சூடைவலை | 11/8X 150X 1500 | 800 |
| 02 | அறக்கொட்டிவலை | 4இழைX2 ¼"X 150X1500 | 800 |
| 03 | கட்டுமரம் (பரிந்துரைக்கப்பட்ட மரம்) | 7முழம் 4கட்டு | 170 |

கூறுவிலை மற்றும் ஏனைய நிபந்தனைகளுடன் 21-07-2005 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகப் பதிவுத் தபாலில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**தலைவர்,**
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
*106 ,4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.*

(C/42012)
(46-14-19-42)


## கணபதி ஜோதிட நிலையம்

**பண்டிட் ஐயப்ப சாஸ்திரி**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒரு முறை சந்தியுங்கள்.

தொடர்பு: **SHANJAEYA REST HOUSE,**
NO.5, RAKKA ROAD (ICRC Office அருகில்),
JAFFNA.T.P.: 077 9173940. (37599)(42.14.18)


## வீடு வாடகைக்கு/ குத்தகைக்கு

யாழ்ப்பாணம் கொட்டடியில் (யாழ். வைத்தியசாலைக்கு ¾ m தூரத்தில்) மீள் திருத்தி அமைக்கப்படும் வீடு ஒன்று வாடகைக்கு/குத்தகைக்கு (2900 சதுர அடி) உண்டு. தொடர்பு: 222 7813.
(நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் முகவர் தேவையில்லை)

(37737) (21-14-19-42)

## ஹென்றியரசர் கல்லூரியில் ஆசிரியர் பற்றாக்குறை

வலி.தென்மேற்கு,ஜூலை16

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

ஆங்கிலம், இந்துநாகரிகம், சங்கீதம், உடற்கல்வி, சித்திரம் ஆகிய பாடங்களுக்கே ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாது இருந்துவருவதாக கல்லூரி அதிபர் வண.பிதா ஜேம்ஸ் சிங்கராயர் தெரிவித்தார்.

இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆவனசெய்யுமாறு வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளரைக் கடிதமூலம் தாம் கேட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை - இந்தக் கல்லூரியில் தளபாடங்களுக்கும் பற்றாக்குறை நிலவி வருகின்றது. 70 வருடங்களுக்கு முன்னர் உற்பத்தி செய்யப்பட்ட பழைய தளபாடங்களே இங்கு தற்போது பாவனையில் இருந்து வருவதாகவும் -

இவையும் சேதமடைந்திருப்பதால் மாணவர்களுக்கான கதிரை, மேசைகள் போன்ற தளபாடங்கள் அவசியம் தேவைப்படுவதாகவும் - கல்லூரி அதிபர் மேலும் தெரிவித்தார்.

(எ-135)

## பருத்தித்துறை
### பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைமைப் பணிமனைக் கட்டடத்தின் கீழ்தளம் நிர்மாணிப்பதற்கான

### கூலி வேலைக்கான மீள் கூறுவிலை கோரல்

மாடிக் கட்டடங்களை நிர்மாணிப்பதில் அனுபவமுடைய கூலி ஒப்பந்தகாரர்களிடமிருந்து மேற்படி பணிமனை நிர்மாணிப்பதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

தகுதியுடையோர் சங்கத்தால் விநியோகிக்கப்படும் கேள்விப் பத்திரத்தினைப் பெற்றுப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை எதிர்வரும் 30.07.2005இற்கு முன்னதாகத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கலாம். மேலதிக விவரங்களைச் சங்கத்தின் தலைமைப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

*சிவன்கோயில் வீதி,
பருத்தித்துறை.*

**பொது முகாமையாளர்.**

(சி-42065)(42-14-18)


## மீள்பரிசோதனை செய்ய உத்தரவு

முதலாம் வருடத்திற்கு மாணவர்களை அனுமதித்தமை தொடர்பில் பொரளை டி.எஸ்.சேனநாயக்க கல்லூரி அதிபர் உட்பட ஏழு பேருக்கெதிராக இரகசியப் பொலீஸார் தாக்கல் செய்துள்ள வழக்கில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களை முழுமையான மீள்பரிசோதனைக்கு உட்படுத்துமா கொழும்பு பிரதம நீதிவான் குசலா சரோஜினி வீரவர்தன நேற்று முன்தினம் இரகசியப் பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி வழக்கு விசாரணை கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்றது. முதலாம் வருட மாணவர் அனுமதி தொடர்பில் விசாரணைகளின் போது பெறப்பட்ட அறிக்கைகள், பெற்றோர்களின் விண்ணப்பங்கள் போன்றவற்றை மீள் பரிசோதனை செய்து அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். அடுத்த மாதம் 17 ஆம் திகதி இது தொடர்பான மேலதிக விசாரணை நடைபெறவுள்ளது.

(க-3)

## எட்டாம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**சி.தனலட்சுமி**

தோற்றம்
06.01.1938

மறைவு
09.07.2005

அம்மா உன்னைத் தேடிவர காலதேவன்
கலங்கியிருக்க மாட்டானா? காரணம் யாருக்கும்
நீ தீங்கே நினைத்ததில்லை - உன்னுடன்
வாழ்ந்தவர்கள் வருந்தி அழைத்தாரோ?
உடனே வந்து அழைத்து செல் என்று
'செல்'லுக்கும் அஞ்சவில்லை. செத்தாலும் அன்னை
மண்ணில் சாவேன் என்று இருந்த உன்னை
சாவு ஏன் அழைத்தது?
நான்கு ஐந்து ஆண்டுகளாய்
ஆண்மகன் வேண்டுமென்று ஆண்டவனை
வேண்டிப் பெற்றெடுத்தாய் என்னை
அம்மா! காரியங்கள் செய்வதற்குக் கடைசி
வரை நீ இருப்பாய் என்று என்னைக் கடல்
கடந்து அனுப்பி வைத்தாய் மனச்சாட்சி
இல்லை அம்மா மகனை அழைப்பதற்கு
மணம் முடித்தவன் கூட மகிழ்ச்சியாய்

வாழ்ந்ததில்லை வாழ் நாளில்
வந்தவர்கள் வாழ்த்தியதில்லை
வாழ்ந்த காலத்தில் கூட கொடுத்து வைக்கவில்லை
என்னுடன் வாழ்வதற்கு
என்னபிறவி அம்மா இப்பிறப்பு
இனி வேண்டாம் மறுபிறப்பு
மகிழ்ச்சி கூட கூடி வாழ
மறக்க மாட்டேன் வாழ்ந்த காலம்
மறுபடியும் பிறந்தால் கூட
மகனாக நான் மட்டும் மடியிலே
தவழ வேண்டும் கடைசி நிமிடம்
காணவில்லை கண்களில் நீர் கசியுதம்மா!
கடைசியாக நீ பேசிய வார்த்தை
காலமெல்லாம் எங்களை வாழ்த்துமம்மா!
உன் ஆத்ம சாந்தி கொள்ள சாந்தி
பல செய்வேன் சத்திய மகன் நானம்மா!

**துயரத்தை துடைக்க வந்தோருக்கும் தொலைபேசியில் தொடர்பு கொண்டோருக்கும் எங்கள் நன்றிகள்**

65, WAIDYA ROAD,
DEHIWALA,
0777 209730

(C/42062)(25-14-19-42)

**சிவரூபன் (மகன்)
மீரா (மருமகள்)
சிவானி (பேர்த்தி)**

## நல்லடக்க ஆராதனை

கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள் (வெளி 14:13)

### *லவல் ஜெயமணி*

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் விக்ரோரியா கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லவல் ஜெயமணி விக்ரோரியா 06.07.2005 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வில்மன்ட் A.லவல் அவர்களின் அன்பு மனைவியும் Rev.Sis.பியங்கா, M.கந்தையா, சாம் லவல் (U.K.), பெனிடா வின்டஸ் (U.K), விக்டர் லவல் (U.S.A) ஆகியோரின் அன்புத் தாயாரும் Rev.H.கந்தையா (கானான் ஜெப ஆலயம்), மைக்கல் வின்டஸ் (U.K), வனஜா லவல் (U.S.A) ஆகியோரின் மாமியும் ஹெமா வின்டஸ், சோன், லோரா லவல் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நினைவு ஆராதனை நாளை (17.07.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு இருபாலை கானான் ஜெப ஆலயத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மதியபோசனம் இடம்பெறும். மாலை 3.30 மணிக்கு அன்னாரின் அஸ்தி அடக்கம் செய்யப்படுவதற்காக இராசவீதியில் அமைந்துள்ள கானான் ஜெப ஆலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், சபை மக்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இருபாலை,
கோப்பாய்.*

(37774)(42.14.19)

தகவல்:
*கானான் ஜெப ஆலய
போதகர்*

## மரண அறிவித்தல்

### *திருமதி புனிதவதியார்*



செட்டியகுறிச்சி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த திருமதி புனிதவதியார் 13.07.2005 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டிதர் நடராஜா - மங்கையர்க்கரசி தம்பதிகளின் அன்பு மகளும் கருணை ஆனந்தன் (Auditor & Tax Consultant) அவர்களின் பாசமிகு சகோதரியும் இராஜேஸ்வரியின் அன்பு மைத்துனியும் திருமகள் - மகேந்திரன் (Norway), கலைமகள், சிவமகள், கருணைராஜ் (Canada) ஆகியோரின் ஆசை மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 17.07.2005 ஞாயிற்றுக்கிழமை பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் காலை 8.00 மணி தொடக்கம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 10.00 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பகல் 11.00 மணியளவில் கனத்தை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

தொடர்பு:
14A/6, Dickmans Road,
Colombo - 04.
2555108.

(C/42061)(42.14.19)

தகவல்:
*ந.கருணைஆனந்தன்
(சகோதரன்).*

# கால்நடை அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும்படி வலியுறுத்து

வலி.தெற்கு.ஜூலை16

குடாநாட்டில் செயற்படுத்தப்படவுள்ள கிராமிய விவசாய அபிவிருத்தித் திட்டப் பகுப்பாய்வு அறிக்கையில் கால்நடை அபிவிருத்தி சம்பந்தமான திட்டங்கள் உள்ளடக்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் கால்நடை வைத்திய அதிகாரிகள் ஊடாக முன்னெடுக்கப்படவேண்டும்.

- இவ்வாறு கால்நடை வைத்திய அதிகாரிகளின் மாகாணப் பணிப்பாளர் டாக்டர் க.சிவலிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

கால்நடை அபிவிருத்தித் திணைக்கள மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 'நியாப் திட்டம் 11' சம்பந்தமாகவும் அதனுடைய முக்கியத்துவம் பற்றியும் அவர் விளக்கிக் கூறினார்.

யாழ். மாவட்டத்தில் 'நியாப் திட்டம் 11' இன் கீழ் அபிவிருத்தி செய்யப்படுவதற்கென தற்போது 25 கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இந்த அபிவிருத்தியின் ஒரு கட்டமாகக் கால்நடை அபிவிருத்தி சம்பந்தமான திட்டங்களும் உள்ளடக்கப்படவேண்டும். கால்நடை வைத்திய அதிகாரிகள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

அபிவிருத்திக்காகச் சமர்ப்பிக்கப்படும் திட்டங்கள் கால்நடை உற்பத்திப்பொருள்களைச் சந்தைப்படுத்தலை முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டும் - என்று அவர் மேலும் கூறினார்.

(ஒ-152)

# பொதுப்பணியின் பொக்கிஷம்



நெடுந்தீவினிலே காலத்திற்குக் காலம் அவதாரம் செய்யும் அன்புவழிகளின் வரிசையில் விசுவநாதர் - நாகமுத்து தம்பதிகளுக்கு ஏக புத்திரனாக 1929.09.04இல் சுப்பிமணியம் பிறந்தார். குடும்பத்தில் இரு மழலைகளோடு இன்புற்றிருந்தார்.

யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடி அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியைப் பெற்றார்.

பாடசாலைக் காலத்திலேயே எழுத்தாற்றலிலும் ஆங்கில அறிவிலும் மேலோங்கியிருந்தார். பாடசாலை வைபவங்களில் சிறப்பித்தும் வந்தார். தனது உயர்கல்வி நிறைவுபெற்றதும் தனது இருபத்தியிரண்டாவது வயதில் 1951ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை செயலகத்தில் நிர்வாக சேவை எழுதுவினைஞராகக் கடமையேற்றார். அதன்பின்னர் கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டச் செயலகங்களிலும் (கச்சேரி) இறைவரி உத்தியோகத்தர் பணிமனையிலும் கடமையாற்றினார்.

சிங்களம் மட்டும் அரச கரும மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டதன் காரணமாக 1962இல் தனது எழுதுநர் பதவியைத் தூக்கி எறிந்தார்.

தனக்குக்கிடைத்த நீண்ட நேரங்களைப் பொதுப்பணிகளில் செலவிடலானார். குறிப்பாகப் பொருளாதார இடர்பாடுகளுக்கு உட்பட்டிருந்த மக்களின் நிலையை உணர்ந்து அப்போது பிரபல்யம் பெற்றிருந்த வெங்காயக் கூடைகள் இழைத்தலை வீடுகள்தோறும் ஊக்கப்படுத்தி அவற்றை ஏற்றுமதிசெய்யும் வழிவகைகளையும் ஏனைய விவசாய உற்பத்திப் பொருள்களையும் சந்தைப்படுத்தும் வசதிகளையும் ஏற்படுத்தினார்.

போக்குவரத்து, வைத்தியசேவை, தபாற்சேவை ஆகியவற்றில் காணப்பட்ட குறைபாடுகளை உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் பத்திரிகைகள் மூலம் வெளிப்படுத்தியும் ஊரியதீர்வைப் பெற்றுக்கொள்ளச் செய்தார்.

## நீத்தார் நயப்புரை

பொதுச்சேவைக் கூட்டுறவுச் சங்கம், நெடுந்தீவு நற்பணிக்கழகம், பொருளாதார அபிவிருத்திச் சங்கம் போன்ற அமைப்புகள் மூலம் பலவித அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்பதை அறியமுடிகின்றது.

1970ஆம் ஆண்டு ஆங்கில ஆசிரியராக மீண்டும் அரச சேவையில் இணைந்துகொண்டார். ஆசிரிய பயிற்சியின் பின் பொதுநெறி ஆசிரியராகி நெடுந்தீவு மகாவித்தியாலயம், சுப்பிரமணிய வித்தியாலயம், பரந்தன் இந்துமகாவித்தியாலயம் ஆகியவற்றில் சிறந்த சேவையாற்றினார். இறுதியாக நெடுந்தீவு ஸ்ரீஸ்கந்த வித்தியாலயத்தில் அதிபராகப் பணியாற்றினார். இப்பாடசாலையின் வரலாற்றுச் சிறப்பை ஓர் பாமாலையாக வெளிப்படுத்தினார்.

கல்விப்புலம் மீது மிக்க கருசனை கொண்டிருந்த இவர் நெடுந்தீவு மாணவர்களின் உயர் கல்வி நிலைபற்றி வேதனையோடு வெளிப்படுத்திய கட்டுரைகளும் அண்மையில் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. தனது சிந்தனையின் வெளிப்பாடுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கவும், வலுச்சேர்க்கவும் பலரை இணைத்து அவற்றில் வெற்றிகண்ட அமரர் நிறைந்த மன நிறைவைப்பெற்றார்.

- கோ.பத்மநாதன்,



மூத்த பத்திரிகையாளர்செல்லப்பா நடராசாவின் பவள விழா அண்மையில் கோண்டாவில் ஆசிமட அரசடி சிவபூமி பாடசாலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உதயன் - சஞ்சீவி நிறுவனத்தினர் சார்பில் விழா நாயகன் அன்பளிப்புக் கேடயம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படுகிறார். அருகில் திருமதி செல்லப்பா நடராசாவும் காணப்படுகின்றார் (204)



யாழ். மாவட்ட பிரதேச அஞ்சல் அத்தியட்சகராக இருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் சம்பந்தர் சிவராஜசிங்கத்துக்கு கோப்பாய் அஞ்சல் அலுவலகத்தில் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது. அந்த நிகழ்வில் அவர் நன்றியுரை தெரிவிப்பதையும் அருகில் தபால் அதிபர் பொ.திருச்செல்வம் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

# மக்கள் முகம்



தென்னிந்தியத் திருச்சபையின் மூத்த குருவானவரும் கிழக்குப் பிராந்தியத்தின் திருச்சபைப் பொறுப்பாளருமான வண.கலாநிதி எஸ்.ஜெயநேசன் கனடாவிலுள்ள ரொறன்ரோ பல்கலைக் கழகத்தின் ஒரு பகுதியான கனடா கிறிஸ்தவ கல்லூரி பட்டப் படிப்பு நிறுவனத்தினூடாக கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

இவர் ஏற்கனவே B.Th., B.D, S.Tm போன்ற பட்டங்களையும் பெற்றுள்ளார்.

30 வருடங்களாகத் தென்னிந்தியத் திருச்சபையின் குருவாகப் பணியாற்றிவரும் இவர் வரணி, வன்னி, கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற பணித்தலங்களில் இறைபணி மற்றும் சமூகப் பணிகளை ஆற்றி வந்துள்ளார். குறிப்பாக வன்னியில் திருச்சபை வேரூன்றக் காரணமாக விளங்கியவர்.

இவரது சமூகப் பணிகளாகச் சிறுவர் இல்லங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள் என்பவற்றைச் சகல வசதிகளுடனும் அமைத்துள்ளதுடன் வீட்டுத்திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றார். வெளிநாட்டு நண்பர்களின் உதவியையும் இணைத்து சேவையாற்றி வருகின்றார்.

இலங்கையின் நிலைவரத்தை அடிப்படையாகக் கொண்டு 'பாடுகள் துன்பங்கள் மத்தியில் தேவதூதுப் பணி' என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையை எழுதி கலா நிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார். (202)

* * *



இலங்கை வங்கியின் யாழ் மேற்றரக் கிளையில் இளநிலை நிறைவேற்று அதிகாரியாகக் கடமையாற்றிய வி.எஸ். குலசிங்கம் கடந்த 8 ஆம் திகதி ஓய்வுபெற்றுள்ளார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியிலும் யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்திலும் கற்று தொடர்ந்து திருகோணமலை இந்துக் கல்லூரியிலும் கல்வியைத் தொடர்ந்தார்.

1976 ஆம் ஆண்டு தனது வங்கி வாழ்க்கையை பருத்தித்துறைக் கிளையில் ஆரம்பித்தார். சுன்னாகம், முல்லைத்தீவு, யாழ். இரண்டாம் கிளை, யாழ். மேற்றரக் கிளை, யாழ். கச்சேரிக் கிளை ஆகியவற்றில் பணி செய்தார்.

வங்கி காலத்துக்குக்காலம் புதிதாக அறிமுகப்படுத்தும் திட்டங்களை போர்ச்சூழல் காலத்திலும் முன்னின்று நடத்தி வங்கியின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியுள்ளார். அதுமட்டுமன்றி, சமூகப் பணியும் சமயப் பணியும் செய்துவருகின்றார்.

(3-204)

# நூல் வரிசை



நூல் : சிறுவர் பாமாலை
ஆசிரியர் : சு.அடைக்கலம்
அச்சுப்பதிப்பு: லங்கா பப்ளிஸிங் கவுஸ்

எழுத்தாளன் உருவாக்கப்படுகின்றான் என்றால், கவிஞன் பிறக்கின்றான் என்றே குறிப்பிட வேண்டும். தற்போது பலர் கவிதைகளையும், கட்டுரைகளையும், சிறுகதைகளையும் படைக்கின்றார்கள். ஆனால், அவற்றில் சிலருடைய ஆக்கங்களே மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறுகின்றன. அவற்றிலும், குழந்தைகளுக்கு- அவர்களின் இயல்பூக்க நடவடிக்கைகளுக்கு ஏற்ப- ஆக்கங்களை வெளியிடுவது என்பது மிகவும் கடினம். 'சிறுவர் பாமாலை' என்ற இந்த நூலாசிரியர் சு.அடைக்கலத்தின் (தமிழமுதன்) நூல் சிறுவர்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்குப் பெறும் என்று எதிர்பார்க்கலாம்.

நூலாசிரியர் சு.அடைக்கலம் ஆசிரியராக, அதிபராகப் பணியாற்றிய காலங்களில் தனது பதவியினின்று இறங்கிச் சிறுவர்களோடு கூடி மகிழ்ந்து, அவர்களின் உளவியற் செயற்பாடுகளை நன்கு அகழ்ந்தாராய்ந்து தான் அவர்களிடம் கற்ற அனுபவங்களை வைத்துக்கொண்டு 'சிறுவர் பாமாலை' என்ற நூலை தெள்ளிய தமிழில் அழகுறு நூலாகப் படைத்துள்ளார்.

நூலின் முன் அட்டைப்படத்திலே சிறுவர்களைக் கவரும் வண்ணம் அழகிய அட்டை வடிவமைப்பு இடம்பெற்றுள்ளது. உள்ளே ஒவ்வொரு கவிதைத் தொகுப்புக்க ளிலும் கவிதைக்குப் பொருத்தமான அழகுறு படங்கள் இடம்பெற்றுள்ளமை சிறுவர் மனதில் நூலைப் படிக்கத்தூண்டும் என்றால் மிகையாகாது.

சிறுவர்களுக்கு மிகவும் பிரியமுள்ள அம்மா பற்றி குழந்தைகள் மீது தாயின் செயற்பாட்டை விளக்கும் வகையில் கவிஞரின் முதலாவது கவிதை அமைந்துள்ளது. கவிதையின் மூலம் குழந்தைகளுக்கு எண் கற்றல் முறையை விளக்குகின்றார். குழந்தைகளின் பிஞ்சு மனதில் பாடல் வெகுவாக இடம்பிடிக்கிறது. இவர், பத்துக்கு உட்பட்ட எண்களை பாடல்களின் மூலம் விளக்குகின்றார்.

விஞ்ஞானத்தின் படிமுறை வளர்ச்சிப் படிநிலைகளையும் இவர் கவிதைகள் மூலம் குழந்தைகள் புரியும்படி கூறுகின்றார். மற்றும் வீட்டுப் பிராணிகள் பற்றியும் சுகவாழ்வு பற்றியும் தபால்பெட்டி, மிதிவண்டி என்பன பற்றியும் இலகு கவிதைகளால் விளக்கியுள்ளார்.

'இன்பத் தமிழ் வாழக்கும்மியடி' என்ற பகுதியில் தமிழ் வளர்ந்த பழந்தமிழ்ப் புலவர்களின் பெருமைகளை மாணவருக்கு விளக்குகின்றார். ஆசிரியர் தமிழமுதனின் 'சிறுவர் பாமாலை' என்றநூல் சிறுவர்களின் அறிவியல் வளர்ச்சிக்குப் பெருவிருந்தாக அமையும் என்றால் மிகையாகாது.

தெல்லியூர் சி.ஹரிகரன்.



நூல்: நாவலர் பாலர் பாடசாலை ஆண்டு விழா மலர்
வெளியீடு: ஈஞ்சடி நாவலர் பாலர் பாடசாலை

சுதுமலை,ஈஞ்சடி வைரவ கோயிலடியில் அமைந்துள்ள நாவலர் பாலர் பாடசாலை தனது முதலாவது ஆண்டு விழா நினைவாக இம் மலரை வெளியிட்டுள்ளது.

பாடசாலையின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் இம் மலரின் ஆரம்பத்திலேயே கொடுத்துள்ளனர்.

பேராசிரியர் சபா ஜெயராசாவின் 'சிறாரும் மொழிப்பதிவுகளும்' என்னும் கட்டுரை, யாழ். பல்கலைக்கழகக் கல்வியற்றுறைத் தலைவர் மா.சின்னத்தம்பியின் 'முன்பள்ளிகளும் சமூக நிலைமைகளும்' என்னும் கட்டுரை என்பன இடம்பெற்றுள்ளன.

சுதுமலையின் கல்விக் கண்களாக விளங்கும் ஏனைய பாடசாலைகளான சிந்மய பாரதி வித்தியாலயம், சுதுமலை வடக்கு தமிழ்க்கலவன் வித்தியாலயம், சுதுமலை தமிழ்க் கலவன் வித்தியாலயம் என்பனவின் வரலாறுகளும் இம்மலரில் எடுத்துரைக்கப்படுகின்றன.

சுதுமலையில் தோன்றிய வைத்தியப் பெரியார்களைப் பற்றியும் வரலாறு கூறுவதுடன் செவ்வியும் இடம்பெற்றுள்ளது.

இம் மலரில் பாடசாலைச் சிறார்களின் கலை நிகழ்வுகள் மற்றும் பாடசாலை நிகழ்வுகளின் புகைப்படப் பிரதிகளும் பிரசுரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

-தீபா

உ

# மங்களகரமான திறப்புவிழா அழைப்பு

**பேரன்புடையீர்!**

*எமது* **IIS** *நிறுவன நெல்லியடிக் கிளையின் தகவல் தொழில்நுட்ப சேவையை விரிவுபடுத்துமுகமாக பார்த்திப வருடம் ஆனிமாதம் 32ஆம் திகதி இன்று (16.07.2005) சனிக்கிழமை காலை 8.15 மணிதொடக்கம் 8.55 மணிவரையுள்ள சிங்கலக்கினமும் சுவாதி நட்சத்திரமும் கூடிய சுபவேளையில்*

**கொடிகாமம் வீதி, நெல்லியடியில்**

e INFO SYSTEM

*எனும் நிறுவனம் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது என்பதை அனைவருக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். ஆரம்ப வைபவத்திற்கு எமது அன்பர்கள், அபிமானிகள் அனைவரும் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

**கொடிகாமம் வீதி,**
**நெல்லியடி.**

**e Info System**

**அன்பர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள், மாணவர்கள் அனைவரும் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

# கண்ணீர் அஞ்சலி



**மண்ணில் 23-12-1959** **விண்ணில் 10-07-2005**

ஊர்ப்பெயரை உன்னோடு சேர்த்துக் கொண்டாய்
உனை நாடி வந்தோர் யாவரையும் வாழவைத்தாய்
அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரமாய்
அன்னை நாட்டில் நீ ஆட்சி செய்தாய்
திருப்பணிகள் செய்ய நீ தயங்கவில்லை
தேடிவந்தோர் யாவரையும் நீ சினக்கவில்லை
கல்விப் பணியில் உன் கைகள் களைக்கவில்லை
கர்ணனுக்கு நீயும் சளைக்கவில்லை
இன்பமோ துன்பமோ எதுவந்த போதிலும்
நண்பனாய் நல்ல சகோதரனாய்
தோள் கொடுத்து துணை நின்ற தூயவனே!
காலனிடமும் நீ கருணை கொண்டாயோ?
காக்க வைக்க மனமின்றி உடன் சென்றாயோ?

**அமரர்**
**இராஜரட்ணம் விஜயகுமார்**
**(கோப்பாய் விஜி)**

அன்னாரின் இழப்பால் தவிக்கும் மனைவி பிள்ளைகளுக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கண்ணீருடன் நண்பர்கள்
**வசந்தன், கண்ணன், தேவன்.**

(37757)(42.14.15)

# குருநாகலில் தேசிய மட்டத்திலான வலைப்பந்தாட்டம் இன்று ஆரம்பம்

## யாழ்.மாவட்டத் தெரிவு அணியும் பங்கேற்கின்றது

யாழ்ப்பாணம்,ஜூலை16

தேசிய மட்ட கனிஷ்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி குருநாகலில் உள்ள மலையகப்பிட்டி மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றது.

இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ்.மாவட்டத் தெரிவு அணி நேற்றுப் புறப்பட்டது.

சுகிர்தா தில்லைநாதன் தலைமையில் செல்லும் இக் குழுவில் 12 வீராங்கனைகள் இடம்பெறுகின்றனர்.

அணியில் இடம்பெறும் வீராங்கனைகள் வருமாறு:-

சுகிர்தா தில்லைநாதன் (அணித் தலைவி), பிருந்தா சோமசுந்தரம் (அணி உதவித் தலைவி), மயூரி கந்தசாமி, மேனகா அமிர்தலிங்கம், கௌசிகா சோமசுந்தரம், சிஷாந்தி குலசேகரம், மயூதினி குணரத்தினம், மைதிலி இராஜரத்தினம், யசோதா இராஜதுரை, தயானி செபஸ்தியாம்பிள்ளை, ஸ்ரீ காயத்திரி திருநாவுக்கரசு. அணியின் முகாமையாளராக திருமதி என்.தர்மகுலசிங்கமும் பயிற்றுநராக ஏ.ஜே.ரூபசிங்கவும் பணியாற்றுகின்றனர்.

இன்று ஆரம்பமாகும் இச்சுற்றுப்போட்டியில் சகல மாவட்டங்களில் இருந்தும் தெரிவு அணிகள் பங்குபற்றுகின்றன. (3)

## கபடிப் போட்டியில் வவுனியா சம்பியன்

வவுனியா,ஜூலை16

வவுனியாவில் நடைபெற்றுவரும் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கபடிப் போட்டியில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாகாணச் சம்பியனானது.

இந்தப் போட்டியில் வவுனியா கணேசா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் திருகோணமலை முள்ளிப்பொத்தானை சிங்கள மகாவித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றன. (3-164)

## சைக்கிள், மரதன் போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை16

அராலி தெற்கு களவத்துறை விளையாட்டுக்கழகம் தனது 58ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் சைக்கிள் மற்றும் மரதன் ஓட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு அராலி தெற்கு களவத்துறை சனசமூக நிலையமுன்றலில் நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் இன்று நேரில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-202)

# விக்ரோரியாவை வென்றது நெல்லியடி

யாழ்ப்பாணம்,ஜூலை16

அஸ்ரா கிண்ணத்துக்காக நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்துக்கும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கும் இடையிலான 15 வயதுப் பிரிவு ஆட்டத்தில் நெல்லியடி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி ம. ம.வி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பிரதீஸ் 35 ஓட்டங்களையும் ராஜ்குமார் 34 ஓட்டங்களையும் அரவிந்தன் 14ஓட்டங்களையும் பெற்றனர்.

கோவர்த்தனன் 3 விக்கெட்டுக்களையும் சயந்தன்,சுதாகரன், ஜேசிந்தன் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி 103 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. சயந்தன் 33 ஓட்டங்களையும் கரன் 13 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

மேனன் 5 விக்கெட்டுக்களையும் அரவிந் 3 விக்கெட்டுக்களையும் ராஜ்குமார் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்ஸ்க்காக துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி 4 விக்கெட்டுக்களை இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டபோது ஆட்டம் முடிவுற்றது.

கரன் 47 ஓட்டங்களையும் ரஞ்சன் 16 ஓட்டங்களையும் தேனுசன் 15 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். மேனன், ராஜ்குமார் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

புள்ளிகளின் அடிப்படையில் நெல்லியடி ம.ம.வி. வெற்றியீட்டியது. (3)

# பெரியபுலம் ம.வியை ஹாட்லி வென்றது

## அன்ரன் தொம்சன் சதம் அடித்தார்

யாழ்ப்பாணம்,ஜூலை16

அஸ்ரா கிண்ணத்துக்காக யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 17வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் பெரியபுலம் ம.வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வென்றது.

ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் யாழ். பெரியபுலம் மத்திய மகா வித்தியாலயம் துடுப்பெடுத்தாடி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றது. ஆகக்கூடுதலாக வின்சிலோ 18 ஓட்டங்களைப் பெற்றார்.

சதீஸ், சேயோன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், பிரசன்னா, ராஜ்குமார் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி 3 விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

அன்ரன் தொம்சன் 114 ஓட்டங்களையும் இராஜ்குமார் 75 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

சுமுகன், பிரதீசன் ஆகியோர் முறையே 2,1விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பெரியபுலம் மகாவித்தியாலயம் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 67ஓட்டங்களைப் பெற்றது.

இதில் வின்சிலோ 39 ஓட்டங்களைப் பெற்றார்.

சேயோன், சதீஸ், ராஜ்குமார் ஆகியோர் முறையே 5,3,2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (ஓ-86)

# தேசிய உதைபந்தாட்ட தெரிவுப் பயிற்சி; யாழ்.வீரர் எழுவர் பங்குபற்றுவர்

## நீண்டகாலத்தின் பின் கிட்டியுள்ள சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

தேசிய உதைபந்தாட்ட (பி) அணியில் இடம்பெறும் வீரர்களுக்கான தெரிவுப் பயிற்சியில் பங்குபற்ற யாழ்.மாவட்டத்திலிருந்து ஏழு வீரர்கள் கொழும்பு சென்றுள்ளனர்.

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் கடந்தவாரம் யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற தெரிவுப்பயிற்சியில் 37வீரர்கள் கலந்துகொண்டனர். இவர்களில் ஏழுவீரர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தெரிவுசெய்யப்பட்ட எவ்.கமிலஸ், எஸ். சயந்தன், வி.வசந், எஸ்.பெலிக்ஸ், எஸ்.றொமிதாசன், ஏ.யூலியன் ஆகியோர் நேற்றுக் கொழும்புக்குப் புறப்பட்டனர்.

கொழும்பில் நடைபெறும் மூன்றுநாள் பயிற்சியில் இவர்கள் பங்குபற்றுவர். அதில் தமது திறமையைக் காட்டினால் தேசிய அணியில் இடம்பெறும் வாய்ப்புக் கிட்டும்.

இந்தப் பயிற்சியில் சகல மாவட்டங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட வீரர்கள் கலந்துகொள்வர்.

இந்தத் தெரிவுப் பயிற்சி வருடா வருடம் நடைபெற்று வருகின்ற போதும் முதற்தடவையாக யாழ்.வீரர்கள் இதில் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது. (3-190)

# விளையாட்டு

## வேலணையில் கரப்பந்தாட்டம் காந்திஜி அணி சம்பியன்

வேலணை அம்பிகை நகரைச் சேர்ந்த மாவீரர்கள் நினைவாக அம்பிகை நகர் சனசமூக நிலையமும் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் காந்திஜி வி.க.அணி வெற்றிபெற்றது.

கடந்த் வாரம் அம்பிகை நகர் விளையாட்டு மைதானத்தில் நடந்த இப்போட்டியின் முதலாவது அரையிறுதியாட்டத்தில் செட்டிபுலம் ஐயனார் அணியை எதிர்த்து தம்பாட்டி காந்திஜி (பி) அணி மோதியது.

செட்டிபுலம் ஐயனார் அணி 14:13 என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதியாட்டத்தில் தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரை இறுதியாட்டத்தில் அம்பிகை நகர் உதயசூரியன் அணியை எதிர்த்துத் தம்பாட்டி காந்திஜி (ஏ) அணி மோதியது.

தம்பாட்டி காந்திஜி அணி 21:19 என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதிபெற்றது.

இறுதியாட்டத்தில் காந்திஜி (எ) அணியை எதிர்த்து செட்டிபுலம் ஐயனார் அணி மோதியது.

காந்திஜி (ஏ) அணி 21: 19 என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றிகொண்டு வெற்றிக் கிண்ணத்தினைத் தனதாக்கியது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் அம்பிகை உதயசூரியன் அணியை எதிர்த்து காந்திஜி(பி) அணி மோதியது.

அம்பிகை உதயசூரியன் அணி 27:11 என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

4 வீரர்கள் மாத்திரம் பங்குபற்றிய 20 நிமிடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கேம் முறையிலான இப்போட்டியில் 21 அணிகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆட்டத்தில் நடுவர்களாக கே.ஏகாம்பரம், கப்டன் டி.எம்.எ.குணசிங்கம் ஆகியயோர் கடமையாற்றினார். (3-190)

# கனிஷ்ட மெய்வன்மைப் போட்டிகள்; வடக்குக்கு 5 பதக்கங்கள் கிடைத்தன



வி.கஜிதா | கே.தர்ஷினி | எஸ்.தாரணி

யாழ்ப்பாணம்,ஜூலை16

சுகததாஸ விளையாட்டரங்கில் கடந்தவாரம் நடைபெற்ற தேசிய கனிஷ்ட பிரிவு மெய்வன்மைப் போட்டிகளில் வடக்குக்கு ஐந்து பதக்கங்கள் கிடைத்துள்ளன.

இந்தப் போட்டிகளில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து வீர, வீராங்கனைகள் பங்குகொண்டனர்.

பதக்கம் பெற்ற வீர, வீராங்கனைகள் வருமாறு:-

- கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.தாரணி பரிதி வட்டம் (தட்டுஎறிதல்) போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும், குண்டு எறிதல் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளார்.
- முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.நிறஞ்சன் 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் (48.96செக்கன்) தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளார்.
- யாழ்.மாவட்டத்தை சேர்ந்த வி.கஜிதா உயரம் பாய்தலில் (1.51 மீற்றர்) வெண்கலப்பதக்கத்தையும், கே.தர்சினி குண்டு எறிதல் (9.27மீற்றர்) வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றுள்ளனர். (3-190)

# யாழ். பல்கலை, ஜொனியன்ஸ் அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூலை16

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடந்த ஆட்டங்களில் யாழ்.பல்கலைக்கழக அணியும் ஜொனியன்ஸ் அணியும் வெற்றிபெற்றன.

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி.வெற்றிக் கிண்ணத்திற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணி, ஜொனியன்ஸ் வி.க. அணி வெற்றிபெற்றது.

சென்றல் வி.க. அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக் கழக அணி மோதியது. முதலாவது ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றல் வி.க. அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது.

கலிஸ்ரன் 32 ஓட்டங்களையும், றஜீவ் 24 ஓட்டங்களையும் றஜீவ்குமார் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

அருள்ராஜ், ஜெயந்தன், லம்போதரன், செந்தூரன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக்கழக அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்களினைப் பெற்றது.

அருள்ராஜ் 38 ஓட்டங்களையும், ஜெயந்தன் 27 ஓட்டங்களையும், தானஸ்காந் ஆட்டம் இழக்காமல் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

கலிஸ்ரன், றஜீவ்குமார் ஆகியோர் தலா 2 விக்கெட்டினையும் யசோதரன், சத்தியன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

யாழ். பல்கலைக்கழக அணி 95 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற மற்றோர் ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் வி.க. அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் வி.க. அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் வி.க. அணி 9 விக்கெட்டினை இழந்து 70 ஓட்டங்களினைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் வி.க. அணி ஒரு விக்கெட்டை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றது.

அன்புஜன் 39 ஓட்டங்களையும் கேசவநீதன் 19 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.றஞ்சித் ஒரு விக்கெட்டினை வீழ்த்தினார். (3-190)

## இலங்கை மின்சார சபை - யாழ்.பிரதேச அலுவலகம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

அவசர பராமரிப்பு வேலைகளைச் செய்யும் பொருட்டு 17.07.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 5.30 மணி வரை கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்குமென்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத் திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத் தில் கொள்ளவும்.

வலிகாமம் கிழக்கு, நல்லூர், கல்வியங்காடு, பட்டணப் பகுதி நீங்கலாக யாழ். மாநகரசபைப் பகுதி, தென்மராட்சிப் பிரதேசம், வடமராட்சிப் பிரதேசம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, உரும்பிராய், கோண்டாவில், காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப் பகுதி.

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றேன்.

**பிரதேச மின்பொறியியலாளர்,**
**இலங்கை மின்சார சபை.**

(சி.42075) (39-15-11)



## கண்ணீர் அஞ்சலி

D.A.M. வைத்தியர்கள் சங்க வவுனியா மாவட்ட உறுப்பினர் டாக்டர் செ.ப.சத்தியநாதன் J.P.அவர்களின் அன்புத் தந்தை

### டாக்டர் செல்லையா பத்மநாதன் J.P.

(திடீர்மரண விசாரணை அதிகாரி)

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் இவ்வேளையில் கவலையில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அகில இலங்கை D.A.M.வைத்தியர்சங்கம்,
யாழ்ப்பாணம்.

(37793) (39-11-15)



உ
முருகன் துணை

திரு.க.இராஜரட்ணம் ஆசிரியர் அவர்கள் தொகுத்து எழுதிய

## அருள் அமுதம் (தோத்திரமாலை)
## நூல் வெளியீட்டுவிழா

இடம்: நெல்லை முருகன் திருமணமண்டபம்
காலம்: நாளை (17.07.2005) ஞாயிறு பி.ப.4மணி
விழாவில் பங்கேற்போர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், சுவாமி சித்ருபானந்தா, பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய கௌரிபாலக்குருக்கள்,பேராசிரியர் கலாநிதி கோபாலகிருஷ்ண ஐயர், திரு. சிவமகாலிங்கம், திரு.வி.செல்வராசா.
பண்ணிசைக் கச்சேரி: தாவடியூர் K.S.R. திருஞானசம்பந்தன் (பக்கவாத்திய சகிதம்)

-விழாக்குழு.

(37789) (39-11-15)



Jayoda **ஜயோதா** ජයෝදා

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7097807 முதல் 7110987 வரை சீட்டிழுப்பு இல. 150 திகதி 14-7-2005

வெற்றி எண்கள் **5 3 7 4 9 2** சுப்பர் எண் **26**

சுப்பர் ஜக்பொட் பரிசு 3,08,07,450/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 3,08,07,450/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 112 | 5,000/- | 5,60,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,157 | 500/- | 5,78,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,506 | 50/- | 5,75,300/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 114,047 | 10/- | 11,40,470/- |
| | - | | |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 13 | 5,000/- | 65,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 116 | 1,000/- | 1,16,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,152 | 100/- | 1,15,200/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,402 | 20/- | 2,28,040/- |
| | | மொத்தம் | 49,28,510/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 55,31,110/- |

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
**ரூ. 3,11,27,450/-**

தொடர் இல. 6160506 க்கு மேற்பட்ட திங்கட்கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 ஜூலை 18 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தளை | 7103939-5-13 |
| அம்பாறை | 7101368-5-54 |
| இரத்தினபுரி | 7100335-8-93 |
| அனுராதபுரம் | 7100478-7-33 |
| மட்டக்களப்பு | 7103026-2-86 |
| காலி | 7101296-5-37 |
| கண்டி | 7099155-2-34 |
| ஹம்பாந்தோட்டை | 7100633-6-78 |


# இந்துமாநாட்டின் இன்றைய நிகழ்வுகள்

அகில இலங்கை இந்து மன்றத்தின் பொன் விழாவையொட்டி கோப்பாய் தேசியக் கல்வியியற் கல்லூரியில் இடம்பெறும் இந்து மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிமுதல் நடைபெறும்.

இதில் முதல் அமர்வில் 'வழிபாட்டு நோக்கில்' என்னும் பொருளில் கருத்துரைகள் திருமதி நா.செல்வநாயகம் தலைமையில் நடைபெறும்.

ஜெ.உதயகுமார் 'ஈழத்து இந்துமதத்தில் விநாயகர் வழிபாடு', திருமதி ஞா.கணேசநாதன் 'ஈழத்து இந்து மதத்தில் முருகன் வழிபாடு', ஆ.சபாரத்தினம் 'ஈழத்தில் சிவவழிபாடு', திருமதி விக்னேஸ்வரி பவனேசன் 'யாழ்ப்பாணத்தில் விஷ்ணு வழிபாடு' ஆகிய தொனிப் பொருள்களில் கருத்துரைகளை நிகழ்த்துவர்.

'வாழ்வியல் நோக்கில்' என்ற பொருளில் இரண்டாம் அமர்வு பேராசிரியர் க.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் இடம் பெறும்.

கலாநிதி ம.சண்முகதாஸ் 'ஈழத்து இந்து வழிபாடு' மரபில் பெண்மை', ஆறு.திருமுருகன் 'ஈழத்தில் கந்தபுராண கலாசாரம்', திருமதி கோகிலா மகேந்திரன் 'இந்து நேர்த்திக்கடன் களும் உளவியலும்', பிரதிக்கல்விப் பணிப்பாளர் கு.சண்மு கநாதன் 'இந்துமதம் எதிர் நோக்கும் சவால்கள்' என்னும் பொருள்களில் கருத்துரை நிகழ்த்துவர்.

'வழிபாட்டு நோக்கில்' என்னும் பொருளில் மூன்றாம் அமர்வு கலாநிதி ம.சண் முகதாஸ் தலைமையில் நடைபெறும்.

திருமதி கௌரிசுரேசன் 'ஈழத்து இந்து மதத்தில் வைரவர் வழிபாடு', திருமதி ஜெ. தியாகலிங்கம் 'ஈழத்து இந்து மதத்தில் ஐயனார் வழிபாடு', திருமதி செ.சிவபாதம் 'ஈழத்து இந்துமதத்தில் அனுமன் வழிபாடு', பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா 'யாழ்ப்பாணத்தில் விஷ்ணு வழிபாடு' என்ற தலைப்புகளில் கருத்துரை நிகழ்த்துவர்.

'வாழ்வியல் நோக்கில்' என்னும் பொருளில் நான்காம் அமர்வு திருமதி ம.திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும்.

டாக்டர் சி.சிவசண்முகராசா 'ஈழத்து இந்து மதமும் உணவும்', செல்வமனோகரன் 'இளைஞர் நோக்கில் இந்துமதம்', பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர், 'ஈழத்து இந்து ஆலயங்களில் விக்கிரகப் பிரதிஷ்டை; சில மரபுகள்' என்னும் தலைப் புகளில் கருத்துரை நிகழ்த்துவர்.

'வழிபாட்டு நோக்கில்' என்னும் பொருளில் ஐந்தாம் அமர்வு கலாநிதி இராமநா தன் தலைமையில் நடைபெறும்.

கலாநிதி மா.இரகுநாதன் 'ஈழத்தில் கண்ணகி வழிபாடு' திருமதி நா.செல்வ நாயகம் 'ஈழத்தில் சந்நிதி வழிபாடு' கலாநிதி பொ.இரகுபதி 'ஈழத்தில் சிறு தெய்வ வழிபாடு' என்னும் தலைப்புகளில் கருத் துரைகள் நிகழ்த்துவர்.

'வாழ்வியல் நோக்கில்' என்னும் பொருளில் ஆறாவது அமர்வு பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறும்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் 'தனித்துவமான யாழ்ப்பாணத்து இந்து சமய நம்பிக்கைகள்' பேராசிரியர் நா.சண்முகலிங்கம் 'ஈழத்து சமூகக் கட்டமைப்பில் இந்து மதத் தின் பங்களிப்பு' பேராசிரியர் வி.நித்தி யானந்தன் 'ஈழத்து இந்து ஆலயக் கொடை மரபும் சமூக நோக்கும் க.இராஜபுவனீஸ்வரன் 'மக்கள் தொண்டும் சிவதொண்டர் அணியும்' என்னும் பொருள்களில் கருத்துரைகள் நிகழ்த்துவர். (ஒ-204)


## கண்ணீர் அஞ்சலி



செல்வி
### யசோதினி சபா

(யா/ கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம்)
(2006A/L கலைப்பிரிவு மாணவி)

*கல்வியிலே கலங்கரை விளக்கானவளே யசோ!*
*எல்லையில்லா திறன்களெல்லாம் கொண்டவளே!*
*விலங்குனக்கு விழுந்ததுவோ சொல்லு யசோ!*
*விடியலுக்காய் அழுதாயோ சொல்லி விடு!*
*கலங்குகின்றோம் உமைப் பிரிந்து நாங்களின்று*
*கண்ணீரால் காணிக்கை செலுத்துகின்றோம்.*

உன் பிரிவால் துயருறும்:
**உயர்தர மாணவர்கள்**
**(யா/கனகரத்தினம் ம.ம.வி.).**

(37800)(42-11-15)



## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம்.

அமரர்
### பஞ்சாட்சரம் சிவகுமார்

அன்னாரின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

**கவியரசு நகைப்பூங்கா**
உரிமையாளரும், ஊழியர்களும்.

(31801)(21-11-15)



## NEW SCIENCE CENTRE
### யாழ்.நகர்

**CHEMISTRY DAY CLASS**

- அலகு ரீதியான மீட்டல்
- அலகு ரீதியான வினாவிடை
- அச்சடிக்கப்பட்ட பாடக்குறிப்புகள்
- மாதிரி வினாக்கள்
- 5 Model Exam
- 20 இற்கும் மேற்பட்ட கருத்தரங்குகள்
- திங்கள் முதல் வெள்ளிவரை 10-11.30 a.m.

**A/L 2006 ORGANIC**
(Benzene)
Sat., Sun 11-12 & 1-2

By: அன்பழகன் B.Sc.

(37792)(39)



## மரண அறிவித்தல்

திருமதி
### ஜெயராணி ஞானப்பிரகாசம்

திருமதி ஜெயராணி ஞானப்பிரகாசம் 12.07.2005 அன்று லண்டனில் இறைபதம் அடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற இளைப்பாறிய அதிபர் பண்டிதர் பா.செ.ஞானப்பிரகாசத்தின் அன்பு மனைவியும் R.Jஞானப்பிரகாசம் (லண்டன்), செல்வராணி ஆனந்தராசா (கனடா), G.E.தவப்பிரகாசம் (ஆஸ்திரேலியா), மதுரராணி சேவியர்(ஆஸ்திரேலியா), தியாகராணி தேவரட்ணம் (லண்டன்), யோகராணி அலெக்ஸ்சாண்டர் (திருகோணமலை), அருட்சகோதரி M.வளராணி (கொழும்பு), G.R.குலப்பிரகாசம் (கனடா), புனிதராணி பரராஜசிங்கம் (லண்டன்), அமிர்தராணி றொண் (ஆஸ்திரேலியா), விமலராணி மரியதாஸ் (லண்டன்), மடோனா நவராணி ஜெராட் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், எம்.ஜே.அருளானந்தம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரது இறுதிச்சடங்குகள் **Stone Wall - Beckton London** இல் உள்ள அவரது இல்லத்தில் 16.07.2005 காலை 9 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ஏ.எஸ்.ஏ.அலெக்ஸ்சாண்டர்,**
B/4/ 6/7, சொய்சாபுர தொடர்மாடி,
மொறட்டுவை. T.P.: 0112637419



## மரண அறிவித்தல்
### சின்னத்துரை செல்லத்துரை



பிறவுண் றோட், 5ஆம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற சின்னத்துரை சின்னம்மாவின் மூத்த மகனாகிய செல்லத்துரை 11.07.2005 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் பார்பரம்மாவின் அன்புக் கணவரும் வினிதா, விஜி, விஜயகுமார், வித் தியா (சுவிஸ்), விஜிதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரவிச்சந்திரன், அருள்நேசராஜா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் சுஜின்ஸ், சிறோமியா, நான்சி ஆகியோரின் பேரனும் மனோன்மணி, பாலசிங்கம், லீலாவதி, ஞானசேகரம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற குணரத்தினம், பாலசிங்கம், அரியமலர், விமலா தேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (16.07.2005) சனிக்கிழமை ஆத்திசூடி வீதி, 54 | 4, ரவிச்சந்திரன் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் புனித நீக்கிலஸ் நாவாந்துறை தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு வழிபாட்டுடன் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்மார் செ.விஜிதரன்,
செ.விஜியகுமார்.

*பிறவுண் றோட்,*
*யாழ்ப்பாணம்.*

(37799) (39-11-15)


## அபராதம்

தென்மராட்சிஜூலை16

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த இரு வாகனங்களுக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக் கப்பட்டது.

சாவகச்சேரி பொலீஸாரால் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட இவ்வழக்குகளை விசாரித்த நீதிவான் லொறியில் மணல் ஏற்றி வந்தோருக்கு 15 ஆயிரம் ரூபாவும் ஹண்டர் வாகனத்தில் மணல் ஏற்றிவந்தோருக்கு 10 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதித்து மணலையும் பறிமுதல் செய்தார்.(ஒ-111)

# இந்து மாநாடு நேற்று ஆரம்பமாகியது

யாழ்ப்பாணம், ஜூலை16

'இலங்கையில் இந்துசமயம்' என்ற பொருளில் அகில இலங்கை இந்து மாமன்றமும் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து ஏற்பாடுசெய்த இந்து மாநாடு யாழ்.கல்வியியல் கல்லூரியில் நேற்று கோலாகலமாக ஆரம்பமாகியது.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் கல்வியியற் கல்லூரியில் அமைந்துள்ள ஸ்ரீவித்தக விநாயகர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து ஆலய முன்றிலிலிருந்து சமயத்தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள் மங்கள வாத்தியம் முழங்க மாநாடு நடைபெறும் நாவலர் மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டனர். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொன்விழாவை நினைவுபடுத்தும் வகையில் கல்வியியற் கல்லூரி மாணவிகள் 50 விளக்குகளை கைகளில் ஏந்தியவாறு ஊர்வலமாகச் சென்றனர். அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றல் இடம்பெற்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வரக் குருக்கள் ஆகியோர் நிகழ்வில் ஆசியுரை வழங்கினர். பின்னர் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் வி.கயிலாசபிள்ளை தலைமையுரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து தொடக்கவுரையை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியும், வாழ்த்துரையை அருட்கவி சீ.விநாசித்தம்பியும், வாழ்த்துரையை இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸூம் நிகழ்த்தினர். இந்து மாநாட்டின் நோக்கம் குறித்து செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் உரை நிகழ்த்த தொடர்ந்து சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தெய்வத்திருமகள் என்ற பட்டமும் அருட்கவி சீ.விநாசித்தம்பி ஞானவித்தகர் என்ற பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து இந்துஒளி சிறப்பிதழ் வெளியிட்டு வைக்கப்பட்டது. மாநாட்டின் அறிமுகவுரையை பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்தினார்.

பின்னர், தமிழகப் பேராசிரியர் சோ.ந.கந்தசாமி 'என்றும் நிலைக்கும் எம் சமயம்' என்ற பொருளில் சிறப்புரை நிகழ்த்தினார். பேராசிரியர் தொடர்பான அறிமுகவுரையை யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா நிகழ்த்தினார். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இறுதியாக அகில இலங்கை இந்துமாமன்றப் பொதுச்செயலாளர் கந்தையா நீலகண்டன் நன்றியுரை நிகழ்த்தினார்.

இதற்கிடையில் - இந்து மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் நடராஜா மதனராஜா, வேலணை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் எஸ்.கருணாகரகுருமூர்த்தி, ஈ.பி.டி.பியின் தீவகப் பொறுப்பாளர் லோகன் ஆகியோரும் கலந்துகொண்டனர். இவர்களுக்கு பொலீஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்பு வழங்கினர். எனினும் மாநாடு ஆரம்பமான சில நிமிட நேரத்தில் ஆயுததாரிகள் எவரும் மாநாடு நடைபெறும் சூழலில் அனுமதிக்கப்படமாட்டார்கள் என மாநாட்டின் ஏற்பாட்டாளர்கள் ஈ.பி.டி.பியின் மாவட்டப் பொறுப்பாளர் மதனராஜாவிடம் தெரிவித்தனர். இதனையடுத்து மதனராஜாவும் அவரது குழுவினரும் அங்கிருந்து வெளியேறிவிட்டனர். (எ-7)



சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, அருட்கவி சீ.விநாசித்தம்பி ஆகியோர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுவதையும் தமிழகப் பேராசிரியர் உரைநிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- பிரபா)


## S.L.A.S

இக்கற்கை நெறிக்குரிய போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள்

ஆரம்பம் - 17.05.2005 (ஞாயிறு) 2 மணி

**புதிய உயர் கல்லூரி,**
ஆரிய குளம் சந்தி,
யாழ்ப்பாணம். (37804)(38-12-13-34)

## இவரைக் காணவில்லை



நெல்லண்டை, பருத்தித்துறையைச் சேர்ந்த மார்க்கண்டு பார்த்தன் (பார்த்தா) என்பவரைக் கடந்த 07.07.2005 முதல் காணவில்லை. இவரின் பிரிவால் தாயார் மிகவும் நோய்வாய்ப்பட்டுள்ளார். இவரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் எங்கிருந்தாலும் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

பிள்ளையினார் மார்க்கண்டு,
நெல்லண்டை,
பருத்தித்துறை.
(37805)(38-12-13-34)

## யா/புனித ஜோன் பொஸ்கோவின் கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் திருமதி ச. ஸ்ரீஸ்கந்தராசா அவர்களின் அன்புத் தாயார்

திருமதி **இராசேந்திரம் பாக்கியம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் அமரருக்குக் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
(37806)(38-12-13-34)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
**பஞ்சாட்சரம் சிவகுமார்**

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
காவேரிசில்க்ஸ்
லிட்டில் இந்தியன் பெஷன்
உரிமையாளரும், ஊழியர்களும்.
(37807)(38-12-13-34)

## ஆடி மாத அதிரடி மலிவு விற்பனை

25% வரை விலைக்கழிவு

**OCEANICK IMPEX**
192, MAIN STREET, COLOMBO 11.
Tel: 2336720, 2327168, Wholesale: 2384131, Fax; 2326961
E.mail: oceanick192@yahoo.com

## விற்பனைக்கு

சிறைன்டிங் மில் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:
மதுரா அரைக்கும் ஆலை,
மானிப்பாய் வீதி, இணுவில்.

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள வீடியோ டெக், ஓடியோ டப்பிங் டெக், DVD பிளேயர், JVC கெசற் சீடி பிளேயர் செற், ரெக்னிக்ஸ் டெக் செற், 29''Sony TV, நொக்கியா கான்போன் என்பன விற்பனைக்குண்டு.

ஜெகன் வீடியோ ஓடியோ அன் ரெயிலறிங், சட்டநாதர் வீதி,
திருநெல்வேலி. T.P.: 0776547245

## நாதன்ஸ் சினிமா

ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடான அர்ஜூன், சினேகா,கிரண், வடிவேல் நடித்த

**சின்னா** (ரீல்ஸ்)

அடிதடி, காதல், நகைச்சுவை



கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இன்றுமுதல் ஷாம், லைலா, அஸின், புஜா நடித்த

**உள்ளம் கேட்குமே** (ரீல்ஸ்)



காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே).

## ராஜா யாழ்ப்பாணம்

விக்ராந்த், லட்சுமிராய், வடிவேல் நடித்த

**கற்க கசடற** (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி
**இராசேந்திரம் பாக்கியம்**

வைரமுத்து மாமாவின் வாழ்க்கைத் துணையாகி உயிருள்ள நாளும் எமக்கு உதவி - உயிர்பிரிந்த உத்தமியாம் பாக்கியத்தை எவ்வகையாற் போற்றுவோம். இத்தலத்தீர் சொல்லீர் எமக்கு.

உம் பிரிவால் துயருறும்
கலட்டி அம்மன் கோயிலடி
இளைஞர்கள்.
(37812)(38-12-13-34)


## மரண அறிவித்தல்கள்

### செல்வரத்தினம் கஜவிந்தன் (கஜன்)



இணுவில் கிழக்கு, சிவகாமி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடா ரொறன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் கஜவிந்தன் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரத்தினம் இலட்சுமிப்பிள்ளையின் அன்பு மகனும் திலகராணி, கனகராணி (கனடா), ஜெயராணி (கனடா), சதீஸன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தனபாலசிங்கம் (தனபாலசிங்கம் வர்த்தக நிலையம் - உரும்பிராய்), சிவானந்தநாதன் (கனடா), இலங்கேஸ்வரன் (கனடா) ஆகியோ ரின் அன்பு மைத்துனரும் மதுஷா, மதுசன், லவகுஷன், காருண்யன், நிவேதன், கம்சிகன்,மகிஷா, அபிஷா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோ.தனபாலசிங்கம்,
மைத்துனர் (உரும்பிராய்).
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய். (37808)(38-12-13-34)

### சின்னத்தம்பி நவரத்தினம் (குட்டி)



யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் முடமாவடியில் வசித்து தற்போது கனடாவில் வசித்தவருமாகிய சின்னத்தம்பி நவரத்தினம் (குட்டி) அவர்கள் (14.07.2005) வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற இந்திராணி அவர்களின் அன்புக் கணவரும் குணபாலன், தனபாலன், தனலஷ்மி, மேரிலைலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமலகுமாரி, செல்வமணி, சுந்தரலிங்கம், சேவியர், சாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும் சித்திரா, பவித்திரா, சமித்திரா, டயான், இந்துஜா, பிரதீபா, லக்னேஸ், கபில்யா ஹர்சினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2005) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள் - மருமக்கள்.
முடமாவடி,
நல்லூர். (37811)(38-12-13-34)





தென்மராட்சி அல்லாரைப் பகுதியில் 1983 - 7 - 15 இல் படையினர் சுற்றிவளைத்து தாக்குதல் நடத்திய போது அவர்களை எதிர்த்து நின்று வீரச்சாவடைந்த லெப்.சீலன், வீரவேங்கை ஆனந்த் ஆகியோரின்நினைவு நிகழ்வுகள் நேற்று அல்லாரை சீலன் பூங்காவில் நடைபெற்றன. நிகழ்வில் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்இளம்பரிதி உரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் மாவீரர்களின் மலரஞ்சலி இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

# பொதுக்கட்டமைப்பின் ...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

திட்ட அங்கீகாரம் மற்றும் நிர்வாகப் பணிகள் தொடர்பான ஏற்பாடுகள் -

பிராந்திய நிதியம்தொடர்பான சரத்துகளில் கூறப்பட்டுள்ள நிதி முகாமைத்துவம் தொடர்பான ஏற்பாடுகள் -

பிராந்திய சபை கிளிநொச்சியில் அமைந்திருக்க வேண்டும் என்ற ஏற்பாடு -

பிராந்தியசபையால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களை நிர்வகிப்பதற்கான திட்ட முகாமைத்துவப் பிரிவை ஸ்தாபிக்கும் ஏற்பாடு -

பிராந்திய நிதியம் தொடர்பான ஏற்பாடு -

ஆகியன செயற்படுவதற்கு எதிராக இந்த மனுக்களின் இறுதித் தீர்வு வரும்வரை இடைக்காலத் தடைவிதிக்கப்படுசிறது.

(இ) பிராந்திய நிதியத்திற்காக வரும் சர்வதேச, உள்ளூர் நிதிகள் அரசமைப்பு ஏற்பாடுகளுக்கமைய கையாளப்படுவதோடு அதற்கான பாதுகாவலர் நியமிக்கப்பட்டு அந் நியமனம் அது சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டால், அதற்கான கணக்கில் வைப்பிலிடப்படவேண்டும்.

(ஈ) மேலே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமைய பிராந்திய சபைகளின் மையம் இயங்கும் இடம் தீர்மானிக்கப்பட வேண்டும்.

(உ) உடன்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள திட்ட முகாமைத்துவக் குழுவிற்குப் பதிலாக சம்பந்தப்பட்ட அமைச்சினால் நடைமுறையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய பிரிவொன்று உருவாக்கப்படவேண்டும். அந்தத் திட்ட முகாமைத்துவக் குழு, மாவட்டமட்டசபை, பிராந்தியசபை மற்றும் உயர்மட்ட சபை ஆகியவற்றோடு இணைப்பாகச் செயற்பட்டுதிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு சுதந்திரமுடையதாக இருக்க வேண்டும்.

-இவ்வாறு தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி எச்.எல்.டி. சில்வா, எஸ்.எல். குணசேகரா, கோமின் தயாசிறி, மணலி ஜினதாஸ ஆகியோர் மனுதாரர்கள் தரப்பிலும்-

சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.ஸி.கமலசபேசன், உதவி சொலிஸிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி பி.ஏ.ரத்னாயக்க, சிரேஷ்ட அரச சட்டத்தரணி டி.டயஸ் விக்கிரமசிங்க, அரச சட்டத்தரணி விராஜ் ராஜரட்ண ஆகியோர் சட்டமா அதிபர் சார்பிலும் -

நிவாரணம், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி நிஹல் ஹட்ஜ், கே.கீசியனகே, ஆர்.கே. டபிள்யூ. குணசேகர ஆகியோரும் ஆஜரானார்கள்.

(ஐ-க)

# பொதுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமை மீறல் மனுக்களை ஆராய்ந்து அதிலுள்ள சில விடயங்களுக்கு இடைக்காலத் தடையுத்தரவை உயர்நீதிமன்றம் நேற்றுப் பிறப்பித்தது. இதையடுத்து நீதிமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே விமல் வீரவன்ஸ மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதா வது:-

பிராந்திய சபை தொடர்பில் உயர்நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடைஉத்த ரவே பொதுக்கட்டமைப்பின் முக்கியமான பல்லைக் கழற்றிவிட்டது. பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான எமது போராட்டத்தில் கிடைத்த முதல் வெற்றி இது. நாம் இத்துடன் நின்றுவிடாமல் எமது எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம். இந்த வழக்கின் இறுதித் தீர்ப்பும் எமக்குச் சாதகமாகவே கிடைக்குமென நாம் எதிர் பார்க்கின்றோம்.

- இவ்வாறு விமல் வீரவன்ஸ கூறினார்.

(ஐ-க)

# சந்திரிகா - தொண்டா பேச்சு இன்று

கொழும்பு,ஜூலை16

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமானுக்குமிடையிலான முக்கிய பேச்சொன்று இன்று நடைபெறவிருக்கிறது.

மேல்கொத்மலை நீர் மின்திட்டம் தொடர்பில் எழுந்துள்ள புதிய சர்ச்சைகள் குறித்து இந்தச் சந்திப்பின்போது இ.தொ.கா. தலைவர் ஜனாதிபதிக்கு விளக்கமளிக்கவுள் ளார் என காங்கிரஸ் வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

மேல் கொத்மலை நீர்மின் திட்டம் தொடர்பில் இ.தொ.கா. முன்வைக்கும் ஆட்சேபனைகளை கவனத்திற் கொள்ளத்தவறினால் அரசில் தொடர்ந்து அங்கம் வகிப்பது குறித்து தீர்க்கமான முடிவு ஒன்றைத் தாம் எடுக்க நேரிடுமென்று அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

(ஐ-க)

# அக்கரைப்பற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலீஸார் கூறினர்.

"அக்கரைப்பற்று நகரில் இருந்து ஓட்டோ சாரதியையும் அதில் பயணித்த இருவரையும் இடைவழியில் மறித்த ஆயுததாரிகள் சிலர் அவர்களைக் கடத்திச் சென்றுள்ளனர். பின்னர் அவர்களைச் சுட்டுக்கொன்று வீதியோரம் வீசிவிட்டு ஓட்டோவுக்கும் தீ வைத் துள்ளனர்" - என்றார் அக்கரைப்பற்று பொலீஸ் அதிகாரி ஒருவர்.

அக்கரைப்பற்று நீதிவான் சி.எல்.ஏ.மனாப் நேற்றுக்காலை சம்பவம் இடம்பெற்ற பகுதிக்குச் சென்று விசாரணைகளை நடத்தினார். அக்கரைப்பற்றைச் சேர்ந்த இரண்டு முஸ்லிம்கள் அவர்களது உறவினர்களின் சடலங்களை அடையாளம் காட்டினர்.

இவர்கள் கொல்லப்பட்டதற்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைகளை அடுத்து அம்பாறையில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. உயிரிழந்த ஓட்டோ சாரதிக்கு அஞ்சலி செலுத்தி அக்கரைப்பற்றில் ஓட்டோ நிறுத்தும் இடத்திலும் ஓட்டோக்களிலும் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

அக்கரைப்பற்றுப் பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கொலைகளை அம்பாறை மாவட்ட தமிழர் கலாமன்றம் வன்மையாகக் கண்டித்துள்ளது. இது தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியிலான இன உறவுகளைச் சீர்குலைக்கச்செய்யும் பேரினவாத சக்திகளின் செயல் என்று அது தெரிவித்துள்ளது.

இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறா மல் தடுத்துநிறுத்துமாறு அது ஜனாதிபதியி டம் வலியுறுத்தியுள்ளது. (ஐ-க)

# இந்து மாநாடு இன்று நடைபெறா இன்றைய நிகழ்வுகள் திங்களன்று

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ்.தேசியகல்வியியற் கல்லூரியில் நேற்று ஆரம்பமாகிய இந்து மாநாட்டின் இரண்டாவது நாள் நிகழ்வுகள் இன்றையதினம் நடைபெறமாட்டாது என்றும் -

இன்று நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிகழ்வுகள் திங்களன்று நடைபெறும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை வழமைபோல் இந்து மாநாட்டு நிகழ்வுகள் நடைபெறும் என கல்வியியல் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் அறிவித்துள்ளார். (மற்றொரு செய்தி 15 ஆம் பக்கத்தில் ) (எ)

# அமைதி முயற்சிக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய உப தலைவர் தனது திருப்தியினை அப்போது வெளியிட்டார். அதேசமயம், ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்து நிவாரணம் வழங்குவதற்காக அரசு வகுத்துவரும் திட்டங்கள் குறித்து ஜனாதிபதி இந்தப் பேச் சின்போது விளக்கிக் கூறியிருக்கிறார்.

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்காக ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்பட்டமை தொடர்பில் பாராட்டுத் தெரிவித்திருக்கும் வோல்ஸ்ட்ரம் அம்மையார், இலங்கையின் அமைதி முயற்சிக்கும், பொதுக்கட்டமைப்பு அமுலாக்கத்திற்கும் ஐரோப்பிய ஒன்றியம் முழுமையான ஆதரவை வழங்குமென்றும் கூறினார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டார்.

(ஐ-க)

# இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்படியானால் இடைக்காலத் தீர்வோ, நிரந்தரத் தீர்வோ பேச்சு மூலமோ அல்லது அமைதி வழியிலோ எட்டப்படுவது எங்ஙனம்? அதற்கு இந்த ஆட்சி அமைப்பு முறைமையிலே இடம் இருக்குமா? அதற்கு இலங்கையின் அரசமைப்பும் சட்டங்களும் இடம் கொடுக்குமா? - என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன.

அமைதிவழியில் பேச்சு மூலம் தீர்வு காணுங்கள் என்று எம்மை வற்புறுத்தும் சர்வதேச சமூகம் இந்த யதார்த்த சூழ்நிலையைப் புரிந்துகொள்ளவேண்டும், உணர்ந்துகொள்ள வேண்டும். அதற்கு நல்லதோர் வாய்ப்பு இத் தீர்ப்பு.

இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வுகாண்பதற்கான வாய்ப்புகளை வழங்குவதற்கு இலங்கையின் அரசியல் முறைமை எத்தகைய நெகிழ்வுத் தன்மையைக் கொண்டிருக்கின்றது என்பதை இத்தீர்ப்பு எமக்குத் தெளிவுபடுத்தியுள்ளது. - என்றார் ஜோசப் பரராஜசிங்கம். (ஐ-க)

## மரண அறிவித்தல்கள்

### வயித்திலிங்கம் பசுபதிப்பிள்ளை



(வர்த்தகர்)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வயித்திலிங்கம் பசுபதிப்பிள்ளை நெடுந்தீவில் (14.07.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.அருமைநாயகம் (பேறாமகன்).
செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(37816)(38-12-13-34)

### செல்வன் நாகேந்திரன் மிதுலன் (மிது)

(ஆண்டு 9 மாணவன், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரன் - நளாயினி தம்பதியரின் செல்வப்புதல்வன் மிதுலன் (மிது) அவர்கள் 14.07.2005 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2005) சனிக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொட்டுப்பனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
ஆவளைப்பிள்ளையார் கோயிலடி,
சண்டிலிப்பாய் வடக்கு.
(37819)(38-12-13-34)

இதோ வந்துவிட்டது!
பலவர்ண பல வடிவங்களிலான பிள்ளையார் பட நினைவுமலர் அட்டைகள் (கொழும்பில் அச்சிடப்பட்டவை)
சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்
183, பலாலி வீதி, கோண்டாவில்.
தொ.பே.: 222 6722 (37795)

ELECTRONIC REPAIRS
Analog & Digital Monitors
Inkjet / Laser / Dot matrix Printers
Power Supply
Scanners
Laptop & Mobile PCs
UPS
VCD/DVD players
Hi-fi systems
மற்றும் அனைத்து இலத்திரனியல் உபகரணங்கள்
MICRO PC SYSTEMS
யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை 021 222 5893
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039536

SCC
கணனிப் பயிற்சி நெறிகளுக்கு 50% சலுகைக் கட்டணம்
பிரிவு III ஆரம்பம் 16,18.07.2005
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170, 0777846811

BRIGHTMAN
நாவலர் வீதி, யாழ்நகர
A/L PAPER CLASS
Phy: திரு.ஜெயசீலன் Sat./Sun. -10.30 -12 a.m.
CHE: திரு.டயஸ் Sat./Sun. -12 -1.30 p.m.
C.Maths : திரு.துரையப்பா Sat./Sun. -9 -10.30 a.m.
Bio: திரு.பொன்.திவாகரன் Sat./Sun. -9 -10.30 a.m.
ஆரம்பம்: 16.07.2005 Sat.

தென்னிந்தியாவில் இருந்து
ஏழாவது முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ள பரம்பரை சோதிடக்கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்
ராஜகுருசாமி அவர்கள்



வியாழமாற்றம், சனிமாற்றப் பலன்களை அறிவதற்கு மீண்டும் யாழ்.மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க வருகைதந்துள்ளார்.
பார்க்கும் நேரம்: காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை.
கைரேகை மட்டும் 9 மணிமுதல் ஒரு மணிவரை
★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம் ★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்
இவற்றில் பல வருட அனுபவமும் புகழும் பெற்றவர்.
ராஜகுருசாமி
மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1 (112), TEMPLE ROAD (Near ICRC), JAFFNA.
(37722)

மேலும் இரு தினங்கள் நீடிப்பு
மாயாவி - 2005
மாஜாயாலக் கண்காட்சி
யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் சனி, ஞாயிறு
இரு காட்சிகள்: மாலை 6.00 - இரவு 9.00

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.